பக்கங்கள்:-20

காலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவர் ஆண்டு 2057 | ஆனி 05 | வியாழக்கிழமை | 19.06.2025 | அதிர்வு 319

## துரோகிகளுடன் கூட்டு; நரித்தனமான அரசியல்

### இப்படி அமைச்சர் குற்றச்சாட்டு



"முள்ளிவாய்க்கால் பேர வலத்தை அரங்கேற்றிய தரப்புகளுடன் இணைந்து - அந்த அழிவை 06

### இதுவரை காலமும் தூக்கத்தில் இருந்தாரா நீதி அமைச்சர்?

# வடக்கில் பல மனிதப் புதைகுழிகள் வதந்தி என்று அவர் தெரிவித்தமைக்கு எதிராகச் சஜித் அணி கடும் கண்டனம்

"வடக்கில் பல மனிதப் புதைகுழிகள் வதந்திகள் என்று நீதி அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார தெரிவித்துள்ளமையைக் கடுமையாகக் கண்டிக்கின்றோம். அவர் இதுவரை காலமும் தூக்கத்தில் இருந் தாரா?" -

- இவ்வாறு கேள்வி எழுப்பினார் ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப் பினர் கயந்த கருணாதிலக.

மண்டைதீவு மனிதப் புதைகுழி உட்பட வடக்கில் உள்ள பல மனிதப் புதைகுழிகள் குறித்து வெளியிடப்பட்ட 06



# செம்மணி மனிதப் புதைகுழி அகழ்வு; ஆளுநரிடம் வினவிய பிரிட்டன் தூதர்

### காணி அபகரிப்பு வர்த்தமானி, தையிட்டி திஸ்ஸ விகாரை விவகாரங்கள் பற்றியும் அவர் துருவித் துருவி கேட்டறிந்தார்



**செம்மணி மனிதப் புதைகுழி அகழ்வு, காணி உரித்து நிர்ணயத் திணைக்களத்தால் வெளியிடப்பட்ட வர்த்தமானி மற்றும் தையிட்டி திஸ்ஸ விகாரை விவகாரம் என்பன தொடர்பான களநிலைமைகளை வடக்கு மாகாண ஆளுநரிடம் இலங் கைக்கான பிரிட்டன் தூதுவர் துரு வித் துருவி கேட்டறிந்து கொண் டார்.** 07

# தமிழ்த் தேசியச் சக்திகளின் கூட்டிணைவு ஆட்சியே வலி. கிழக்கில் உருவாகியுள்ளது!

### பதவியேற்ற பின் தவிசாளர் தியாகராஜா நிரோஷ் தெரிவிப்பு




"தமிழ்த் தேசியச் சக்திகளின் கூட்டிணைவு ஆட்சியே வலிகாமம் கிழக்கில் இடம்பெற்றது என்பதையிட்டு தமிழ்த் தேசியக் கொள்கைக் கூட்டி னரான நாம் பெருமைப்படுகின்றோம்."

- இவ்வாறு வலிகாமம் கிழக்கு பிரதேச சபையில் மீண்டும் தவிசாளராகப் பதவியேற்றுள்ள தியாக ராஜா நிரோஷ் தெரிவித்தார்.

நேற்று பதவியேற்ற பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துரைக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"எமது மக்கள் தமிழ்த் தேசியக் கொள்கை வழி அரசியலையும் இலட்சியபூர்வமாக நேசிக் கின்றனர். எமது இனம் அரசியல் ரீதியில் எதிர்கொண் டுள்ள பிரச்சினைகளுக்குத் தீர்வு தரும் விடயமாக உள்ளூராட்சி சபைகளைக் 06




சுட்ட மண் ஒட்டாது. இது நமக்குத் தெரிந்தது தான்.

ஆயினும் அரசியல் என்றால் அதுவும் ஒட்டும் போலவே தோன்றுகின்றது.


சைக்கிள் கட்சியில் இருந்து முரண்பட்டு மோதி பிரிந்தவர்கள் மணிவண்ணன் அணியினர். இப் போது அவர்களின் செல்வாக்கில்தான் மான் கட்சி இருக்கின்றது.

அதனால் சைக்கிளும் மானும் சுட்ட மண் போல என்றுதான் நினைத்திருந்தோம். ஆனால் அரசி யலில் பதவி ஆசை என்றதும் சுட்ட மண்ணும் ஒட்டுகிறது. சைக்கிளும் மானும் பதவிக்காக ஒப்பந்தம் செய்து கொண்டுள்ளன.

காரைநகரில் ஆட்சி அதிகாரத்தைப் பங்கி டுவது தொடர்பான உடன்படிக்கையில் மான் கட்சியினரும் சைக்கிள் கட்சியினரும் இணக்கம் கண்டு ஒப்பமிட்டு இருக்கின்றனர்.

சைக்கிள் கட்சியில் இருப்பவர்கள் ஏற்கனவே கொள்கை ரீதியாக ஒன்று பட்டுவிட்டவர்கள் என்று தங்களைப் பீற்றிக் கொள்பவர்கள். 06

# சைக்கிளும் மானும் ஆட்சிக்காக காரைநகரில் கைகோர்க்கின்றன



(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம் காரைநகர்ப் பிரதேச சபையில் தமிழ் மக்கள் கூட்டணி (மான் சின்னம்) மற்றும் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் (சைக்கிள் சின்னம்) கூட்டிணைந்து ஆட்சி அமைக்க இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளது.

காரைநகர்ப் பிரதேச சபைக்கான தவிசாளர் தேர்வு இன்று இடம்பெறவுள்ளது. இதன்போது தவிசாளர், உப தவிசாளர் தேர்விற்காகவே இந்த இணக்கம் நேற்று எட்டப்பட்டுள்ளது.

காரைநகர் பிரதேச சபையில் உள்ள 11 உறுப்பினர்களில் தமிழ் மக்கள் கூட்டணி, அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ், தே.ம.சகதி மற்றும் ஐக்கிய தேசிய கட்சி என்பவற்றுடன் சுயேச்சைக் குழு ஆகிய 5 தரப்புகளும் தலா இரண்டு ஆசனங்களும் தமிழ் அரசுக் கட்சி ஒர் ஆசனத்தையும் பெற்றன.

இதற்கமைய காரைநகரில் ஆட்சி அமைக்கும் நோக்கில் நேற்று இடம்பெற்ற பேச்சில் தமிழ் மக்கள் கூட்டணி மற்றும் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் என்பன ஆட்சிக்காக கூட்டிணைய இணக்கப்பாடு எட்டப்பட்டதுடன் சுயேச்சைக் குழுவும் இணைந்துகொண்டது.

இந்த இணக்கத்தின் பிரகாரம் காரைநகர் பிரதேச சபையில் நான்கு ஆண்டுகள் பதவிக்காலத்தில்

முதல் 16 மாதங்களும் சுயேட்சைக் குழுவைச் சேர்ந்த ஒருவர் தவிசாளராகவும் தமிழ் மக்கள் கூட்டணியினைச் சேர்ந்தவர் உதவித் தவிசாளராகவும் பதவி வகிப்பார்.

இரண்டாவது 16 மாதங்கள் தமிழ் மக்கள் கூட்டணியின் உறுப்பினர் தவிசாளராகவும் அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸைச் சேர்ந்த உறுப்பினர் உதவித் தவிசாளராகவும் இருக்க இணக்கம் காணப்பட்டுள்ளது.

சபையின இறுதி 16 மாதங்கள் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் உறுப்பினர் தவிசாளராகவும் சுயேச்சைக் குழுவின் உறுப்பினர் உதவித் தவிசாரராவும் நியமிக்கப்படுவார்கள் என இணக்கம் கண்டுள்ளனர்.

இதற்கான ஒப்பந்தம் நேற்றுச் செய்து கொள்ளப்பட்டது.




# மத்தளை விமான நிலையப் பாதுகாப்பு; விசேட அவதானம் செலுத்துகிறது அரசு

மத்தளை ராஜபக் ஷ சர்வதேச விமான நிலையத்தின் சுற்று வேலி தொடர்பான தற்போதைய பிரச்சினைகளை நிவர்த்தி செய்வதற்காக பாதுகாப்பு செயலாளர் எயார் வைஸ் மார்ஷல் சம்பத் துாய கொந்தா (ஓய்வு) தலைமையில் நேற்று செவ்வாய்கிழமை விசேட கூட்டமொன்று நடைபெற்றது.

விமான நிலையத்தை சுற்றியுள்ள பகுதியில் யானைகள் ஊடுருவுவதால் சுற்று வேலிக்கு ஏற்படும் தொடர்ச்சியான சேதங்கள் குறித்து இந்த கூட்டத்தின் போது அதிக கவனம் செலுத்தப்பட்டது.

விமான நிலைய செயல்பாடுகள் மற்றும் பொது பாதுகாப்பு ஆகிய இரண்டிற்கும் ஏற்படக்கூடிய அச்சுறுத்தல்களை எடுத்துக்காட்டி பாதுகாப்பு செயலாளர், முப்படைகள் உட்பட அனைத்து தொடர்புடைய நிறுவனங்களும் உடனடி தீர்வு நடவடிக்கைகளை எடுக்க அறிவுறுத்தல் வழங்கினார்.

தற்போதுள்ள சேதங்களை உடனடியாக சரிசெய்வது மட்டுமல்லாமல், எதிர்காலத்தில் இவ்வாறான சேதங்களை தடுக்க நீண்டகால மற்றும் நிலையான தீர்வை எடுக்கவேண்டியதன் முக்கியத்துவத்தையும் அவர் வலியுறுத்தினார்.

சிவில் பாதுகாப்புத் திணைக்களம், வனவிலங்கு பாதுகாப்புத் திணைக்களம் மற்றும் விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) (தனியார்) லிமிடெட் ஆகியவற்றுடன் இணைந்து முப்படைகளையும் பிரதிநிதித்துவப்படுத்தும் அதிகாரிகள் இக் கூட்டத்தில் பங்கேற்றனர்.

இதன்போது அப்பிரதேசத்தில் உள்ள வனவிலங்குகளின் சுற்றுச்சூழல் அம்சங்கள் மற்றும் வாழ்க்கை முறைகளையும் கருத்தில் கொண்டு வேலியின் கட்டமைப்பை மேம்படுத்துவைத்து தொடர்பில் கலந்துரையாடப்பட்டது.

வனவிலங்குகளின் இயற்கை வாழ்விடத்தை சீர்குலைக்காமல் விமான நிலையத்தின் பாதுகாப்பை உறுதி செய்வதற்கு ஒருங்கிணைந்த மற்றும் முன்னெச்சரிக்கை அணுகுமுறையின் அவசியத்தை பாதுகாப்பு செயலாளர் அடிக்கோடிட்டுக் காட்டினார்.

தீர்வுகளை சரியான நேரத்தில் செயல்படுத்துவதை உறுதி செய்வதற்காக சம்பந்தப்பட்ட அனைத்து நிறுவனங்களுக்கிடையில் தொடர்ச்சியான தொடர்பை பேணுவதன் முக்கியத்துவத்தையும் அவர் வலியுறுத்தினார். பாதுகாப்பு அமைச்சின் இராணுவ தொடர்பு அதிகாரியும் இக் கலந்துரையாடலில் கலந்து கொண்டார்.

# தமிழரசுக் கட்சி கூடிய ஆசனங்களைப் பெற்ற சபைகளில் ஆட்சி அமைக்க ஆதரவு தாருங்கள்

## மன்னாரில் சுமந்திரன் நேற்றுக் கோரிக்கை

(மன்னார் நிருபர் எஸ்.ஆர்.லெம்பேட்)

உள்ளூராட்சி மன்ற தேர்தலில் இலங்கைதமிழரசுக்கட்சிக்கு கூடுதலான ஆசனங்கள் உள்ள சபைகளில் ஆட்சி அமைப்பதற்கு யாராக இருந்தாலும் ஆதரவு வழங்க வேண்டியது அவர்களின் தார்மீக கடமை என இலங்கைத் தமிழரசுக் கட்சியின் செயலாளர் சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.




மன்னாரில் நேற்று புதன்கிழமை மதியம் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

நடந்து முடிந்த உள்ளூராட்சி மன்ற தேர்தலில் இலங்கை தமிழரசுக் கட்சிக்கு எந்தெந்த சபைகளில் அதி கூடிய ஆசனங்கள் பெற்றுக் கொள்ளப்பட்டனவோ,அந்தந்த சபைகளில் நாங்கள் ஆட்சி அமைப்பதற்கு ஏனைய கட்சிகள் எங்களுக்கு ஆதரவு வழங்க வேண்டும் என நாங்கள் கூறி இருந்தோம். இதனை ஒரு கோட்பாடாக நாங்கள் கூறி இருந்தோம்.

இத் தேர்தலில் மட்டும் இல்லை, இதற்கு முன் இடம்பெற்ற உள்ளூராட்சி மன்ற தேர்தலிலும் கூறியிருந்தோம்.

பல கட்சிகள் இந்த கோட்பாட்டை ஏற்றுக் கொண்டன. எந்த கட்சிக்கு அதிக ஆசனங்கள் உள்ளதோ அந்த கட்சி ஆட்சியமைக்க ஏனைய கட்சிகள் ஆதரவு வழங்க வேண்டும் என்ற கோட்பாட்டை அவர்கள் ஏற்றுக் கொண்டார்கள்.அவ்வாறு பார்க்கின்ற போது வடக்கு கிழக்கில் இலங்கை தமிழரசுக் கட்சிக்கு 35 சபைகளில் அதி கூடிய ஆசனங்கள் இருக்கின்றன.

அந்த சபைகளில் நாங்கள் ஆட்சி அமைக்க வேண்டும்.

இந்த கோட்பாட்டிற்கு இணங்கிய ஜனநாயக தமிழ் தேசிய கூட்டமைப்பும், தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் அந்த இணக்கப்பாட்டின் அடிப்படையிலே செயல்பட்டிருக்க வேண்டும்.

மக்கள் ஆணை வழங்கி விட்டார்கள்.எந்த கட்சிக்கு அதிக ஆசனங்கள் கிடைத்துள்ளதோ அந்த கட்சி ஆட்சி அமைக்க வேண்டும். – என அவர் மேலும் தெரிவித்தார்.





# சாரதியின் மது போதையினால் லொறி நின்றிருந்த டிப்பருடன் மோதிச் சேதம்

## சாரதி கைது; உதவியாளர் காயங்களோடு வைத்தியசாலையில்!

(பொகவந்தலாவ நிருபர்: எஸ் சதீஸ்)

ஹட்டன் – நுவரெலியா பிரதான வீதியில், குடாகம பகுதியில் நிறுத்தி வைக்கப்பட்ட டிப்பர் மீது லொறி ஒன்று மோதி விபத்துக்குள்ளானதில் லொறியின் உதவியாளர் காயங்களுக்கு உள்ளாகி டிக்கோயா கிழங்கன் ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார் என்ச் ஹட்டன் பொலிஸார் தெரிவித்தனர்.



இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இரவு 09.30 மணியளவில் இடம் பெற்றதாகப் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

குடாகம பகுதியில் இருந்து ஹட்டன் நோக்கி பயணித்த லொறி, நிறுத்தி வைக்கப்பட்ட டிப்பர் மீது மோதியுள்ளது. லொறியியைச் செலுத்திய சாரதி மது போதையில் இருந்தார் என்பது பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

போதையில் லொறியைச் செலுத்திய சாரதி விபத்தை ஏற்படுத்தும் சம்பவம் அந்தப் பகுதியில் பொருத்தப்பட்டிருந்த சீ.சீ.ரி.வி. கமராவில் பதிவாகியுள்ளதாகவும் ஹட்டன் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட லொறியின் சாரதியை ஹட்டன் நீதுவான் நீதிமன்றில் முன்னிலை படுத்துவதற்கான நடவடிக்கையை மேற்கொள்வதோடு சம்பவம் தொடர்பாக ஹட்டன் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.



‘சப்ரகமுவ பல்கலை மாணவன் மரணம்’

# சட்டத்தரணிகள் சங்கத்தின் மனுவை பரிசீலிப்பதற்கான திகதி அறிவிப்பு

சப்ரகமுவ பல்கலைக்கழக மாணவனின் மரணம் தொடர்பில் இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் தாக்கல் செய்த அடிப்படை உரிமைகள் மனுவை எதிர்வரும் ஜூலை மாதம் 18 ஆம் திகதி பரிசிலனைக்கு எடுக்குமாறு உயர் நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டது.

சப்ரகமுவ பல்கலைக்கழகத்தின் தொழிநுட்ப பீடத்தில் இரண்டாம் வருட மாணவனான சரித் டில்ஷான் தயானந்த கடும் பகிடிவதை காரணமாக உயிரை மாய்த்துக் கொண்டார்.

இந்த சம்பவத்தால் அடிப்படை மனித உரிமை மீறப்பட்டுள்ளதாகத் தீர்ப்பு வழங்கக் கோரியும் அது தொடர்பில் விரிவான விசாரணைகளை மேற்கொள்ளுமாறு பிரதிவாதிகளுக்கு உத்தரவிடக் கோரியும் இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தால் மனுவொன்று தாக்கல் செய்யப்பட்டது.

இந்த மனு இன்று எஸ். துரைராஜா, குமுதுனி விக்கிரமசிங்க, மற்றும் ஜனக் டி சில்வா உள்ளிட்ட மூவரடங்கிய உயர்நீதி மன்ற நீதியரசர்கள் ஆயத்தின் முன்னிலையில் அழைக்கப்பட்டது.

இதன் போது குறித்த மனுவிலுள்ள சமர்ப்பணங்களை உறுதிப்படுத்துவதற்காக எதிர்வரும் ஜூலை மாதம் 18 ஆம் திகதி பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும் என நீதியரசர் ஆயம் உத்தரவிட்டது.

# வேகக் கட்டுப்பாட்டை இழந்த ஓட்டோ! இளம் யுவதி ஒருவர் பரிதாப மரணம்!!



வீதியில் பயணித்த ஓட்டோ, வேகக் கட்டுப்பாட்டை இழந்து தடம்புரண்டதில் இளம் யுவதி ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இந்த விபத்து கேகாலை மாவட்டம், ருவான்வெல்லை பிரதேசத்தில் நேற்று புதன்கிழமை பிற்பகல் இடம் பெற்றுள்ளது.

ஓட்டோவில் சாரதி உட்பட நால்வர் பயணித்தனர் எனவும், விபத்தின் போது சாரதியும், இரண்டு பயணிகளும் காயங்களுடன் உயிர் தப்பினர் எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

காயங்களுடன் உயிர் தப்பிய இரு பயணிகளும் உயிரிழந்த இளம் யுவதியின் உறவினர்கள் எனவும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

இந்தச் சம்பவத்தில் வறக்கப்பொலையைச் சேர்ந்த 21 வயதுடைய யுவதியே உயிரிழந்துள்ளார்.

காயமடைந்த இரு உறவினர்களும், ஓட்டோ சாரதியும் ருவான்வெல்லை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

விபத்து தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.



# இஸ்ரேல் - ஈரான் விவாதமின்றி நாடாளுமன்றம் ஒத்திவைப்பு

நேற்று பிற்பகல் 05.30 வரை நடைபெறவிருந்த நாடாளுமன்ற நடவடிக்கைகள் இன்று காலை 09.30 வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

எதிர்க்கட்சிகளின் வேண்டுகோளுக்கு இணங்க, இஸ்ரேல் - ஈரான் மோதல் தொடர்பான விவாதம் நேற்று நாடாளுமன்றில் நடைபெற இருந்த நிலையில் நாடாளுமன்ற நடவடிக்கைகள் ஒத்திவைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

மேற்படி விவாதத்திற்காக ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் அஜித் பி. பெரேராவால் ஒத்திவைக்கப்பட்ட முன்மொழிவு கொண்டுவரப்பட்டது.

எனினும் அந்த முன்மொழிவு விவாதத்திற்கு எடுத்துக்கொள்ள தயாராகவிருந்த சந்தர்ப்பத்தில் அவர் சபையில் இருக்கவில்லை.

அதன் காரணமாக பிரதி சபாநாயகர் வைத்தியர் ரிஸ்வி சாலியினால் நாடாளுமன்ற இன்று வரை ஒத்தி வைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.



# நாட்டில் அதிகரிக்கும் காற்றின் வேகம் கடல் கொந்தளிப்பு குறித்து எச்சரிக்கை

நாட்டின்பலபகுதிகளில்காற்று, மணித்தியாலத்துக்கு30-40கிலோமீற்றர்வேகத்தில் வீசக்கூடும் என வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

மத்திய மலைநாட்டின் மேற்கு சரிவுகளிலும், வடக்கு, வடமத்திய, வடமேல் மற்றும் தென் மாகாணங்களிலும் திருகோணமலை மாவட்டத்திலும் மணிக்கு 30-40 கிலோமீற்றர் வேகத்தில் காற்று வீசக்கூடும்.

இதேவேளை, புத்தளம் முதல் மன்னார் ஊடாக காங்கேசன்துறை வரையிலும், மாத்தறை முதல் ஹம்பாந்தோட்டை ஊடாக பொத்துவில் வரையிலுமான கடற்பிராந்தியங்கள் கொந்தளிப்பாக இருக்கும்.

காங்கேசன்துறையிலிருந்து முல்லைத்தீவு ஊடாக திருகோணமலை வரையிலான கடற்பிராந்தியங்கள், சில நேரங்களில் ஓரளவு கொந்தளிப்பாக இருக்கும்.

கொழும்பிலிருந்து காலி ஊடாக மாத்தறை வரையிலான கடற்பிராந்தியங்களில் கடலலையானது, சுமார் 2 முதல் 2.5 மீற்றர் வரை மேலெழக்கூடும் என வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
அவர்களோடு இந்த ஆட்சிக்கான உடன்படிக்கையில் மான் கட்சியில் ஒப்பமிட்ட வரதராஜன் பார்த்திபனோடு நேற்று இரவு உரையாடினேன்.

"நாங்கள் கொள்கை – கோட்பாட்டுக்காக உடன்படிக்கை செய்யவில்லை. அப்படிச் செய்தோம் என்று கூறப்போவதுமில்லை. ஆட்சி அதிகாரத்தை ஒன்று பட்டு எடுப்பது, அதை எங்களுக்குள் பங்கிட்டு கொள்வதற்குத்தான். அதற்கான உடன்படிக்கையையே காரைநகரில் சைக்கிள் கட்சியில் வென்றவர்களுடன் செய்திருக்கிறோம்." – என்று பட்டவர்த்தனமாகவும் வெளிப்படையாகவும் கூறினார் அவர்.

கொள்கைக் கோட்பாட்டு அரசியல் பற்றி பல தரப்புகளுக்கும் பாடம் எடுத்தவர்கள், இப்போது ஆட்சி அதிகாரத்தை கைப்பற்றுவதற்கும் – கொஞ்சம் விளக்கமாகச் சொல்வதனால் பதவி கதிரை ஆசையைப் பகிர்ந்து கொள்வதற்கும் – உடன்பாடு செய்கிறார்கள். சமரசம் செய்கின்றார்கள்.

கொள்கை – கோட்பாடு ரீதியாக சுட்ட மண் போல ஒட்ட முடியாதவர்கள், பதவி ஆசை என்றதும் பச்சை மண் ஆகிவிட்டார்கள். எல்லாம் பதவி சுகம் செய்கின்ற இச்சைகள்தான்.

* * *

வலிகாமம் வடக்கு பிரதேச சபையில் திருகுதாளம் பண்ணிய தமிழரசு கட்சி பிரதேச சபை உறுப்பினருக்கு எதிராக இரண்டு மணி நேரத்துக்குள் ஒழுக்காற்று நடவடிக்கை பாய்ந்திருக்கிறது. ஒரு வாரத்தில் அவர் பிரதேச சபை உறுப்பினர் பதவியை இழப்பது தொடர்பான கடிதம் கட்சியின் செயலாளரினால் தெரிவத்தாட்சி அலுவலர்களுக்குப் பறக்கும் என்று தெரிகிறது.

ஏற்கனவே கட்சிக்குள் காங்கேசன்துறை தொகுதிக் கிளையில் குழப்பம் பண்ணிக் கொண்டிருந்தவர் இவர் என்று கட்சி வட்டாரங்கள் கூறுகின்றன.

நேற்றைய தெரிவில் மீண்டும் வலி. வடக்கு பிரதேச சபைத் தலைவராக தேர்வு செய்யப்பட்ட சுகிர்தன்தான் கட்சியின் காங்கேசன்துறைத் தொகுதிக் கிளையின் செயலாளராகவும் நீண்ட காலம் தொடர்ந்து பணியாற்றி வருபவர். தமது மகனை அரசியலில் முன் தள்ளுவதற்கு அங்கு சுகிர்தன் இடைஞ்சலாக இருக்கின்றார் என்று கருதிய கட்சியின் முன்னாள் தலைவர் மாவை சேனாதிராஜா, தாம் காங்கேசந்துறைத் தொகுதிக் கிளைத் தலைவர் என்ற முறையில் தொகுதி கிளையின் செயலாளரான சுகிர்தனுக்கு தெரியாமல், சத்தம் சந்ததடியின்றி ஒரு கூட்டத்தை நடத்தி, அதில் இப்போது ஒழுக்காற்று நடவடிக்கைக்கு உள்ளாகி இருக்கும் பொன்னம்பலம் இராசேந்திரனைத் தொகுதி கிளைச் செயலாளராகவும், தந்தை செல்வநாயகத்தின் பேரனான இளங்கோவை தொகுதிக் கிளைப் பிரதி தலைவராகவும் அறிவித்தார்.

ஆயினும் தமிழரசுக் கட்சி பதிவுகளின் படியும், கட்சி நிர்வாகத்தின் தற்போதைய அங்கீகரிப்பின்படியும் சுகிர்தனே அந்தத் தொகுதிக் கிளை செயலாளராக தொடர்ந்து பணியாற்றி வருகிறார். தொகுதிக் கிளைத் தலைவரான மாவை சேனாதிராஜாவின் மறைவு காரணமாகத் தொகுதிக் கிளைத் தலைவர் பதவி இப்போதும் வெற்றிடமாகவே உள்ளது.

ஆயினும், மாவை சேனாதிராஜாவின் மறைவுக்குப் பின்னர் தொகுதி கிளையின் பிரதி தலைவர் என்ற முறையில் தாமே இப்போது தலைவர் எனக் கருதி, தம்மை முன்னிறுத்தி இளங்கோவும், செயலாளராக பொன்னம்பலம் இராசேந்திரனும் அவ்வப்போது சில கடிதங்களை கட்சி பிரமுகர்களுக்கு அனுப்பி கொண்டிருந்தார்கள். ஆனாலும் அவை கவனத்தில் எடுக்கப்படவில்லை.

எது, எப்படியாயினும், பொன்னம்பலம் இராசேந்திரனுக்கு இந்த முறை தேர்தலில் வாய்ப்பு அளிக்கப்பட்டது. ஆயினும், அவர் கிடைத்த அந்தப் பதவியை தனது குசும்புத்தனத்தால் கோட்டை விடப் போகின்றார் என்றே தோன்றுகின்றது.

---

## வடக்கில் பல...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
தகவல்கள் வதந்திகளை அடிப்படையாகக் கொண்டவை என்றும், சரியான தகவல்கள் இல்லாமல் அரசு இவற்றின் மீது நடவடிக்கை எடுக்கத் தயாராக இல்லை என்றும் நீதி அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார நேற்றுமுன்தினம் தெரிவித்திருந்தார்.

இது தொடர்பில் நேற்று கருத்துரைக்கும்போதே கயந்த கருணாதிலக எம்.பி. மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"போர்க் காலத்திலும் சரி, போர் நிறைவுக்கு வந்த பின்னரும் வடக்கில் பல மனிதப் புதைகுழிகள் அடையாளம் காணப்பட்டுத் தோண்டப்பட்டன. தற்போது யாழ்ப்பாணத்திலும் ஒரு மனிதப் புதைகுழி அடையாளம் காணப்பட்டு நீதிமன்றத்தின் உத்தரவுக்கமைய தோண்டப்பட்டு வருகின்றன. ஆனால், போர் நடைபெற்ற காலத்தில் அடையாளம் காணப்பட்ட செம்மணிப் புதைகுழி தவிர வேறு எந்தப் புதைகுழி தொடர்பிலும் வடக்கு மக்களுக்கு நீதி கிடைக்கவில்லை.

இந்நிலையில், வடக்கில் பல மனிதப் புதைகுழிகள் வதந்திகள் என்று நீதி அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார தெரிவித்துள்ளமையைக் கடுமையாகக் கண்டிக்கின்றோம். அவர் இதுவரை காலமும் தூக்கத்தில் இருந்தாரா? நீதி அமைச்சர் என்ற பதவி நிலையை மறந்து அவர் பொறுப்பற்ற விதத்தில் கருத்துத் தெரிவித்துள்ளார். ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தனது அமைச்சரவையில் உள்ள அமைச்சர்கள் தொடர்பில் மீள்பரிசீலனை செய்ய வேண்டும்." – என்றார்.

---

## தமிழ்த் தேசியச்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
கருத்தில் கொள்ளவில்லை. ஆனால், அரசியலின் அடிப்படைத் தளம் என்ற ரீதியிலும், எமது கிராமங்களை நிர்வகிப்பதற்கான அலகு என்ற வகையிலும் இந்த அலகுகூட தேசிய அரசியலின் இருப்பிடமாகவும் கொள்கை வழிப் பயணத்தின் தளமாகவும் இருக்க வேண்டும் என்று எதிர்பார்க்கின்றனர்.

அந்த அடிப்படையில் ஏற்கனவே கொள்கை வழிக் கூட்டாக இயங்கும் தமிழ்த் தேசியப் பேரவை (சைக்கிள்) மற்றும் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியைப் (சங்கு) பிரதிநிதித்துவப் படுத்தும் முழுமையான உறுப்பினர்கள், கௌரவ உறுப்பினர் இ.ஐங்கரன் மற்றும் தொழிலதிபர் சுலக்சன் தலைமையிலான சுயேச்சைக் குழுக்களின் முழுமையான உத்தியோகபூர்வ பங்களிப்பு மற்றும் பகுதியளவில் இலங்கைத் தமிழரசுக் கட்சி (வீடு) மற்றும் தமிழ் மக்கள் கூட்டணி (மான்) ஆகியன வெற்றிக்குத் தேவையான தமது பகுதியளவு பங்களிப்பை நல்கியுள்ளன. ஆகவே, வலிகாமம் கிழக்கு பிரதேச சபையில் அமையப் பெற்றது தமிழ்த் தேசியச் சக்தியின் கூட்டு ஆட்சியாகும்.

சபையில் நாம் பெற்றதை வெற்றியாகக் கருத வேண்டாம். தமிழ்த் தேசியத்தின் உறுதியான நிலைப்பாட்டுடன் கொள்கை வழி அரசியலை முன்னெடுப்பதற்கான பொறுப்பே எம்மிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

கடந்த காலத்தில் 5 வருடங்கள் சபையில் ஆட்சியை அரசியல் கட்சி பாரபட்சமற்ற வகையில் நான் முன்னெடுத்துள்ளேன். அவ்வாறாகத் தமிழ்த் தேசிய நிலைப்பாட்டில் உறுதியாகவும் ஊழலற்ற வகையில் கொள்கை வழி அபிவிருத்தியை முன்னெடுத்தமைக்கும் மத்திய அரசு உள்ளூராட்சி சபைகளின் அதிகாரங்களை மீறிய போது போராடியமைக்குமாகவே எவ்வித எதிர்பார்ப்பும் இன்றி ஆணையை எமது சபையின் கௌரவ உறுப்பினர்கள் தந்தார்கள். ஒத்தழைத்த உறுப்பினர்களின் நிபந்தனை வலிகாமம் கிழக்கின் மாண்பை மேலும் உயர்த்துகின்றது." – என்றார்.

---

## துரோகிகளுடன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
ஆதரித்த டக்ளஸ் தேவானந்தா போன்றவர்களுடன் கூட்டுச் சேர்ந்து ஆட்சியமைக்கும் நரித்தமான அரசியல் யாழ்ப்பாணத்தில் முன்னெடுக்கப்படுகின்றது."

– இவ்வாறு அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் குற்றஞ்சாட்டினார்.

நாடாளுமன்றத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இந்தக் குற்றச்சாட்டை முன்வைத்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"உள்ளூராட்சி சபைகளில் ஆட்சி அமைப்பது தொடர்பில் நாங்கள் யாருடனும் கூட்டுச் சேரவில்லை. எங்களுக்கான ஆதரவு வழங்கப்பட்டு வருகின்றது.

முள்ளிவாய்க்கால் பேரவலத்தை அரங்கேற்றிய தரப்புகளுடன் சேர்ந்து கொண்டு – அந்த அழிவை ஆதரித்த டக்ளஸ் தேவானந்தா போன்றவர்களுடன் இணைந்து ஆட்சியமைக்கும் நரித்தமான அரசியலை நடத்தும் நபர்களாக சிலர் மாறியுள்ளனர்.

ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் சஜித் அணி தொடர்பில் கடந்த காலங்களில் பாரிய விமர்சனங்களை முன்வைத்தவர்கள், அவர்களுடன் சேர்ந்து தமது அரசியலை முன்னெடுக்கும் கேவலமான நிலை உள்ளது.

இப்படியானவர்களே எமக்கு எதிராகப் போலியான பிரச்சாரத்தை தமிழ் மக்கள் மத்தியில் கொண்டு செல்கின்றனர்." – என்றார்.

# என். எம். விஜேபாலவின் கட்சி உறுப்புரிமை இரத்து

பதுளை – கந்தகெட்டிய பிரதேச சபைக்காக ஐக்கிய மக்கள் சக்தி சார்பில் தெரிவு செய்யப்பட்ட என். எம். விஜேபாலவின் கட்சி உறுப்புரிமை இடை நிறுத்தப்பட்டுள்ளது.

அந்த கட்சியின் பொது செயலாளர் ரஞ்சித் மத்துமபண்டாரவின் வெளியிட்டுள்ள அறிக்கையில் இது தொடர்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

கந்தகெட்டிய பிரதேச சபை தவிசாளர், உப தவிசாளர் தெரிவின் போது கட்சியின் முகாமைத்துவ குழு மற்றும் நிறைவேற்று சபை தீர்மானத்தின் அடிப்படையில் செயற்படாமையால் இந்த தீர்மானம் எடுக்கப்பட்டதாக அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிரதேச சபையில் நேற்று நடைபெற்ற கன்னி அமர்வின் போது என். எம். விஜேபால மற்றும் ஐக்கிய மக்கள் சக்தியின் வேறொரு உறுப்பினரும் தவிசாளர் பதவிக்குப் போட்டியிட்டுள்ளனர்.

இதன்போது வாக்குகள் பிரிந்தமையால் கந்தகெட்டிய பிரதேச சபையின் தவிசாளராக தேசிய மக்கள் சக்தியின் ஹர்ஷ பந்து ரணவீர தெரிவு செய்யப்பட்டார்.



## செம்மணி மனிதப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

யாழ்ப்பாணத்துக்குப் பயணம் மேற்கொண்டுள்ள இலங்கைக்கான பிரிட்டன் தூதுவர் அன்ரூ பட்ரிக்ஸ், ஆளுநர் செயலகத்தில் நேற்று புதன்கிழமை வடக்கு மாகாண ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகனைச் சந்தித்துக் கலந்துரையாடினார். இதன்போதே மேற்படி விவகாரங்களை ஆளுநரிடம் அவர் கேட்டறிந்து கொண்டார்.

இங்குள்ள முதலீட்டாளர்களைச் சந்தித்துக் கலந்துரையாடியதாகப் பிரிட்டன் தூதுவர் இந்தச் சந்திப்பின்போது ஆளுநரிடம் குறிப்பிட்டதுடன் முதலீட்டுக்கான சந்தர்ப்பங்கள் தொடர்பிலும் வினவினார்.

வடக்கில் அமையப் பெறவுள்ள மூன்று முதலீட்டு வலயங்களினதும் உட்கட்டுமான அபிவிருத்திக்குரிய ஏற்பாடுகள் நடைபெற்று வருவதாக ஆளுநர் தெரிவித்தார்.

வேலைவாய்ப்புக்கான தேவையைப் பூர்த்தி செய்வதற்கு அவை அவசியம் எனச் சுட்டிக்காட்டிய ஆளுநர், ஆட்சி மாற்றத்தின் பின்னர் முதலீட்டாளர்கள் இங்கு அதிகளவில் வருகின்றனர் எனவும் குறிப்பிட்டார்.

இளையோரிடத்தில் புலம்பெயர்வுக்கான சிந்தனை மேலோங்கியிருக்கின்றது என்பதையும் ஏற்றுக்கொண்ட ஆளுநர், அவர்களுக்கான வேலைவாய்ப்புக்கள் இங்கே உருவாக்கப்பட வேண்டும் என்ற நோக்கத்திலேயே முதலீட்டு வலயங்களை அமைக்கும் நடவடிக்கைகளும் அரசால் எடுக்கப்பட்டு வருகின்றது எனவும் தெரிவித்தார்.

சுற்றுலாப்பயணிகளின்வருகைதொடர்பிலும்,விமானசேவைமற்றும்கப்பல்சேவைகள் தொடர்பாகவும் ஆளுநரிடம் பிரிட்டன் தூதுவர் கேட்டறிந்துகொண்டார்.

யாழ்ப்பாணத்துக்கும் கொழும்புக்கும் இடையிலான உள்ளூர் விமான சேவை ஆரம்பிக்கப்பட்டிருந்தாலும் கட்டுநாயக்காவுக்கும் பலாலிக்கும் இடையிலான விமான சேவை ஆரம்பிப்பது பெருமளவு சுற்றுலாப் பயணிகளுக்கு உதவக் கூடியதாக இருக்கும் எனக் குறிப்பிட்ட ஆளுநர், இதற்குரிய கோரிக்கை அரசிடம் முன்வைக்கப்பட்டுள்ளது எனவும் தெரிவித்தார்.

காணிஉரித்துநிர்ணயத்திணைக்களத்தால் வெளியிடப்பட்ட வர்த்தமானி, தையிட்டி திஸ்ஸ விகாரை விவகாரம் மற்றும் செம்மணி மனிதப் புதைகுழி அகழ்வு என்பன தொடர்பாகவும் பிரிட்டன் தூதுவர் களநிலைமைகளைக் கேட்டறிந்து கொண்டார்.

யாழ்ப்பாணத்தின் வலிகாமம் வடக்கு பிரதேசத்தில் எதிர்காலத்திலும் படிப்படியாக காணிகள் விடுவிக்கப்படும் என எதிர்பார்ப்பதாகப் பிரிட்டன் தூதுவரிடம் ஆளுநர் இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்தார்.

கடந்த காலங்களில் பிரிட்டன் அரசு ஐ.நா.வின் முகவர் அமைப்புக்கள் ஊடாக பல்வேறு நிதி உதவிகளை வழங்கியதை நினைவுகூர்ந்த ஆளுநர், தற்போதும் இந்தியாவில் இருந்து நாடு திரும்ப எதிர்பார்த்துள்ள அகதிகளுக்கான வாழ்வாதாரத்துக்கு உதவிகள் தேவை என்ற கோரிக்கையையும் ஆளுநர் முன்வைத்தார்.

மேலும், பிரதான வீதிகள் புனரமைக்கப்பட்டிருந்தாலும் கிராமிய வீதிகள், கிராமிய உட்கட்டுமானங்களுக்கான தேவைகள் மற்றும் பின்தங்கிய மக்களின் வாழ்வாதார மேம்பாட்டுக்கான தேவைப்பாடுகள் இன்னமும் உள்ளன எனவும் பிரிட்டன் தூதுவருக்கு ஆளுநர் தெரியப்படுத்தினார்.

இந்தச் சந்திப்பில் ஆளுநரின் செயலாளர் மற்றும் ஆளுநரின் இணைப்புச் செயலாளர்கள் பங்கேற்றனர்.







# மட்டக்களப்பு ஜெயந்திபுரம் ரயில் கடவையில் ரயிலுடன் கார் மோதியதில் ஒருவர் படுகாயம்!

## கடவைக்குக் காவலாளி இல்லாததமையால் இந்த விபத்து

(கனகராசா சரவணன்)

மட்டக்களப்புத் தலைமையகப் பொலிஸ் பிரிவிலுள்ள ஜெயந்திபுரம் ரயில்வே கடவையில் ரயிலுடன் கார் ஒன்று மோதிய விபத்தில் காரைச் செலுத்தி வந்தவர் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சேர்க் கப்பட்டர். இந்தச் சம்பவம் நேற்று புதன் கிழமை பிற்பகலில் இடம்பெற்றுள் ளது.

இந்த ரயில் கடவையில் கடந்த 3 மாதங்களுக்கு மேலாக காவலாளி பணி யில் இல்லாதமையச்ல் இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது

இது பற்றி தெரியவருவதாவது:-

கொழும்பில் இருந்து மட்டக்களப்பு நோக்கி எரிபொருள் ஏற்றிக் கொண்டு சென்ற ரயில் நேற்றுப் பிற்பகல் ஒரு மணியளவில் மட்டக்களப்பு ரயில் நிலை யத்தை அண்டிய பகுதியை வந்தடைந்த போது அங்கு ஜயந்திபுரம் ரயில்வே கடவையின் கதவுகள் மூடாததை யடுத்து அதன் ஊடாக பிரயாணித்த காருடன் ரயில் மோதியது.

விபத்தில் காரைச் செலுத்தி சென்ற ஏறாவூர் பிரதேசத்தைச் சேர்ந்த 43 வயதுடைய இரு பிள்ளையின் தந்தை படுகாயமடைந்த நிலையில் மட்டு போதனா வைத்தியசாலையில் அனு மதிக்கப்பட்டார்.




இந்த விபத்தில் கார் பலத்த சேத மடைந்துளள்ளது. அந்த ரயில்வே கடவையில் காவலாளி இல்லாததால் இந்து விபத்து இடம் பெற்றுள்ளது.

இந்த ரயில் கடவை தொடக்கம் மாவட்டத்திலுள்ள ரயில் கடவை களின் காவலாளிகள் பொலிஸ் திணைக் களத்தினால் நியமிக்கப்பட்டு இவர்க ளுக்கு பொலிஸ் திணைக்களத்தி னால் மாதாந்தம் 7 ஆயிரத்து 500 ரூபா சம்பளமாக கொடுக்கப்பட்டு வருகின்றது

இந்த நிலையில் பொலிஸாரால் நிய மிக்கப்பட்ட ரயில் கடவை காவலாளிகள் சம்பளம் போதாது காரணமாக அந்த வேலையில் இருந்து விலத்தியுள்ள சூழலில் இந்தக் கடவைக்கு கடந்த 3 மாதங்களாக காவலாளி இல்லாத நிலையே நீடித்துள்ளது. இந்தக் கடவை ஊடாக பாடசாலை மாணவர்கள் மற்றம் பொதுமக்கள் அதிகமாக பிரயாணம் செய்து வருகின்றமையுடன் அதிகமாகக் குடியிருப்புக்களை கொண்ட பகுதியில் இந்தக் கடவை உள்ளது .

இவ்வாறான நிலையில் அடிக்கடி ரயில் பிரயாணிக்கும் போது ரயில் கடவை கதவுகளை மூடுவதற்கு திறப்பதற்கு காவலாளி எவரும் இல்லாததால் பா- துகாப்பு இல்லாத கடவையில் அடிக்கடி இவ்வாறான விபத்துக்கள் இடம்பெற்று வருகின்றது

உனவே உடனடியாக ரயில்வே கடவைகளுக்கு காவலாளிகளை நிய மித்து, பொதுமக்களை காப்பாற்ற பொலிஸார் மற்றும் அதிகாரிகள் உட னடியாக கவனம் செத்தவேண்டும் என பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள் ளனர்.

# பஸ்ஸில் மாணவி மீது சேட்டை விட்ட சிப்பாய் முருங்கன் பொலிஸால் கைது

(மன்னார் நிருபர்)

மன்னார் மடுப் பிரதேசத்தில் இருந்து முருங்கன் பகுதியில் உள்ள பாட சாலைக்கு அரச பஸ்ஸில் பயணித் துக் கொண்டிருந்த பாடசாலை மாணவி மீது அந்த பஸ்ஸில் பயணித்த இரா ணுவச் சிப்பாய் ஒருவர் பாலியல் சேட்டை மேற்கொண்டார் எனக் கூறப்படுகின்றது. அந்தச் சிப்பாயை முருங்கன் பொலிஸார் கைது செய்



துள்ளனர்.

நேற்று புதன்கிழமை காலை இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

பாடசாலை மாணவி முருங்கன் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்த நிலையில் முருங்கன் பொலி ஸார் இராணுவச் சிப்பாயைக் கைது செய்துள்ளனர்.

மேலதிக விசாரணைகளை முருங் கன் பொலிஸார் மேற்கொண்டு வரு கின்றனர்

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்



259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## முட்டாள்தனமான பேச்சு

‘சட்டியைப் பார்த்து பானை கறுப்பு எண்டதாம்’ என்பார்கள்.

முள்ளிவாய்க்காலில் ஈழத் தமிழினத்திற்கு ஏற்பட்ட பேரவலம் குறித்து முதலைக் கண்ணீர் வடித்து, அதில் அரசியல் செய்யும் விதத்தில் கருத்து வெளியிடும் தேசிய மக்கள் சக்தி அரசின் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகரின் கருத்தைப் பார்க்கும் போது மேற்படி பழமொழிதான் நினைவிற்கு வருகிறது.

“முள்ளிவாய்க்கால் பேரவலத்தை அரங்கேற்றிய தரப்புகளுடன் இணைந்து அந்த அழிவை ஆதரித்த டக்ளஸ் தேவானந்தா போன்றவர்களுடன் கூட்டு சேர்ந்து ஆட்சியமைக்கும் நரித்தமான அரசியல் யாழ்ப்பாணத்தில் முன்னெடுக்கப்படுகின்றது.” - இவ்வாறு கடற்றொழில், நீரியல் மற்றும் கடல்வளங்கள் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் குற்றஞ்சாட்டினார்.

நேற்று நாடாளுமன்றத்தில் அவர் இவ்வாறு கூறியிருக்கிறார். இதே கருத்தை அண்மையில் யாழ்ப்பாணத்திலும் அவர் வெளியிட்டிருந்தார்.

உள்ளூராட்சி சபைகளில் நிர்வாகத்தை கைப்பற்றுவது தொடர்பாக தமிழர் தரப்புகளுக்கு இடையே நடைபெறும் இழுபறி தொடர்பில் அவர் அரசியல் நையாண்டித்தனம் பண்ணுவது குறித்து எமக்கு ஆட்சேபனை இல்லை. ஆனால் அது விடயத்தில் முள்ளிவாய்க்கால் பேரவலம் குறித்து அவர் பேசுவதுதான் விந்தையிலும் விந்தை. தாம் - தமது தரப்பு - இதில் புனிதம் மிக்கது போல அவர் திருகுதாளம் பண்ணுவதுதான் உலக மகா ‘ஜோக்’!

தமிழர்களுக்கு முள்ளிவாய்க்கால் வரை பேரவலம் தொடர்ந்து மோசமாக அது முடிவுற்றமைக்குப் பிரதான காரண கர்த்தாக்களாக இருந்த ஜே.வி.பியின் முக்கிய செயற்பாட்டாளர் அவர்.

முள்ளிவாய்க்கால் வரைத் தமிழர்களுக்கு நேர்ந்த பேரவலத்திற்கான பிரதான பொறுப்பாளிகளில் அவரும் அவரது கட்சியும் முக்கியமான தரப்புகள். அப்படி இருக்க தாங்கள் ஏதோ உத்தமர்கள் போலவும், இப்போது தமிழ் கட்சிகளில் சிலதான் அத்தகைய பேரவலத்திற்குக் காரணம் என்பது போலவும் அவர் மக்களின் காதில் பூச்சுற்றும் விதத்தில் கருத்து தெரிவிக்கிறார் - மக்களை முட்டாள்களாக எண்ணிக் கொண்டு.

முள்ளிவாய்க்காலில் தமிழர்களுக்கு நேர்ந்த பேரவலத்துக்குத் தமிழ் கட்சிகளோ அல்லது அவர் குறிப்பாகச் சுட்டுகின்ற ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியோ உதவினவா என்பது வேறு விடயம். ஆனால் அந்தப் பேராவலத்தின் பிரதான சூத்திரதாரிகள், அதனை மூடி மறைத்துக் கொண்டு, அதற்காக வேறு தரப்புகள் மீது கறை பூச முனைவது முட்டாள்தனமான நடவடிக்கையாகும். மக்களை ஏமாளிகளாக்கும் செயலாகும்.

தமிழ்ப் போராளிகளுக்கு எதிரான யுத்தம் முடிவு வரை மூர்க்கமாக முன்னெடுக்கப்பட வேண்டும் என்று பேரினாவாத மேலாண்மைத் திமிர்ச் சிந்தனையோடு சந்நதம் கொண்டு நின்றதே ஜே.வி.பிதான். மனிதப் பேரழிவைக் கவனத்தில் கொள்ளாது இறுதிவரை யுத்தத்தை மூர்க்கமாகத் தொடர்ந்து புலிகளை அழித்துத் துவம்சம் செய்யுங்கங்கள் என்று ராஜபக்ஷக்களைத் தூண்டி, ஊக்குவித்து, விடாது நச்சரித்துத் தொல்லை கொடுத்து, உக்கிரமூட்டியவர்களே இந்த ஜே.வி.பியினர்தான். பின் நாளகளில் அதற்கு உரிமையும் கோரியவர்கள். இப்படிக் கொடூர யுத்தத்தை நடத்துவதற்குத் தேவையான படையினரை - சிங்கள இளைஞர்களை - முழுமூச்சில் திரட்டி கொடுத்தவர்களும் அவர்களே.

அப்போது அதன் அங்கத்தவராக - முக்கிய பிரதிநிதியாக - செயலாற்றியவர் இந்த சந்திரசேகர்.

தமிழர் தாயகத்தை வடக்கு - கிழக்கு எனப் பிரிக்கும் கைங்கரியத்தை செய்தவர்களும், சுனாமி மீள் நிர்மாண நடவடிக்கைகளை விடுதலை புலிகளும் அரசும் சேர்ந்து முன்னெடுப்பதை தடுத்து நிறுத்தி யுத்தத்திற்கான முனைப்பை ஏற்படுத்தி, சிங்கள ஆட்சியாளர்கள் தமிழர்களைக் கொன்றொழிக்கும் தீவிர யுத்தத்திற்கு ஒற்றைக் காலில் நின்று தூண்டி, வழிப்படுத்தியவர்கள் இவர்கள்தான்.

அந்தக் கேவலம் கெட்ட நாசகார அணியிலிருந்து கொண்டு, முள்ளிவாய்க்காலில் தமிழர்களுக்கு நேர்ந்த பேரவலம் குறித்து அவர் ஆதங்கத்துடன் பேசுபவர் போல நடிப்பது, கொலையாளியே நீதி பற்றி உரைக்கும் அபவாதமாகவே தெரிகிறது.

தமிழர்களுக்கு நடந்த அட்டூழியங்கள் பற்றி - அவற்றின் மூல காரணர்கள் பற்றி - தமிழர்கள் அறியார் என்ற முட்டாள்தனமான எண்ணத்தில் இப்படி அவர் பிதற்றுகின்றார் போலும்.

தமிழர் தேசம் இந்த முள்ளிவாய்க்கால் பேரவலத்தை ஏற்படுத்திய கொடூரர்களை - மூலகாரணர்களை - இலகுவில் மறந்து விடாது, ஏதோ ஒரு வகையில் பழி தீர்க்காமல்.



# ஈரானிலுள்ள இந்தியர்களை உடனடியாக மீட்பதில் சிக்கல்

போர்ச்சூழல் காரணமாக, ஈரானில் சிக்கியுள்ள இந்தியர்களை உடனடியாக வெளியேற்ற முடியாததன் பின்னணி தகவல்கள் வெளியாகி உள்ளன. உக்ரைனில் இருந்தது போன்ற சாதகமான சூழல் இல்லாததால் இந்தியர்கள் வெளியேறுவதில் சிக்கல்கள் எழுந்துள்ளதாக கூறப்படுகிறது.

ஈரானில் ஆயிரக்கணக்காக இந்திய மாணவர்கள் சிக்கித் தவிக்கின்றனர். ஈரானில் உள்ள சுமார் 10,000 இந்தியர்களில் 2,000 பேர் மாணவர்கள். சுமார் 6,000 பேர் நீண்ட காலமாக ஈரானில் பல்வேறு பணிகளில் ஈடுபட்டு அங்கு வசித்து வரும் இந்தியர்கள். இவர்களைத் தவிர, இந்திய மாலுமிகள் மற்றும் கப்பல் துறையுடன் தொடர்புடையவர்களும் ஈரானில் உள்ளனர். இவர்கள் அனைவரையும் உடனடியாக வெளியேற்ற முடியாத நிலை உள்ளது.

கடந்த2022ஆம்ஆண்டில்உக்ரைன் மீது ரஷ்யா போர் தொடுத்தது. அங்கு சிக்கியிருந்த இந்தியர்களில் ஆயிரக்கணக்காக மாணவர்களும் இருந்தனர். கடந்த 2022 பிப்ரவரி மற்றும் மார்ச் மாதத்துக்கும் இடையில் சுமார் 22,500 இந்தியர்கள், உக்ரைனில் இருந்து இந்தியாவுக்கு வெற்றிகரமாக மீட்டு அழைத்து வரப்பட்டனர். இதற்காக, ‘ஒபரேஷன் கங்கா’ எனும் பெயரில் இந்திய பாதுகாப்பு அமைச்சகம் இந்த நடவடிக்கையை எடுத்தது.

‘ஒபரேஷன் கங்கா’ மூலம் மொத்தம் 90 விமானங்களில் உக்ரைனில் இருந்து இந்தியர்கள் வெளியேற்றப்பட்டனர். அவற்றில் 14 விமானங்கள் அண்டை நாடுகளில் இருந்து இந்திய விமானப் படையால் இயக்கப்பட்டன. இதற்காக ஹங்கேரி, ருமேனியா, மால்டோவா, ஸ்லோவாக்கியா மற்றும் போலந்து ஆகிய நாடுகளிடமிருந்து இந்தியா அதிகமான ஒத்துழைப்பைப் பெற்றது. இது ‘ஆபரேஷன் கங்கா’வின் செயல்பாடுகளை எளிதாக்கியது. இந்தியாவுடன் நல்ல உறவைக் கொண்ட போலந்து வழியாக அதிக எண்ணிக்கையிலான இந்தியர்களை வெளியேற்ற முடிந்தது. இதற்காக பிரதமர் மோடி தனது பயணத்தின் போது போலந்தையும் பாராட்டினார்.

ஆனால், ஈரானில் இருந்து அது போன்ற பெரிய அளவிலான வெளியேற்றம் அவ்வளவு எளிதானது அல்ல எனக்கூறப்படுகிறது. புவியியல்அமைப்பு, வான்வழிகளில் தடைகள், இராஜதந்திர உணர்திறன் மற்றும் அச்சுறுத்தல் உணர்வு ஆகியவை இதற்கான காரணங்களாக கூறப்படுகிறது. ஈரானில் இருந்து எந்தவொரு வெளியேற்ற நடவடிக்கைக்கும் இந்திய அரசு இன்னும் எந்தப் பெயரையும் சூட்டவில்லை. ஈரானில் இருந்து வானில் பறக்க, புவியியல் மற்றும் ராஜதந்திர தடைகள் உள்ளன.

மேலும், உக்ரைனுடன் ஒப்பிட்டால், ஈரானில் இருந்து திரும்பி வர விரும்பும் இந்தியர்களின் எண்ணிக்கையும் குறைவு. அத்துடன் இந்தியர்களுக்கான பாதுகாப்பான வழிகள் மற்றும் அவர்களது விருப்பங்கள் குறைவாகவே உள்ளன. ஈரானின் தலைநகர் தெஹ்ரானில் வசிக்கும் இந்தியர்கள் தங்கள் சொந்த வளங்களுடன் பாதுகாப்பான இடங்களுக்குச் செல்லுமாறு இந்திய தூதரகம் அறிவுறுத்தியுள்ளது

ஆனால், இஸ்ரேலிய வான்வழித் தாக்குதல்களானது ஈரானின் பல பகுதிகளில் பரவியுள்ளன. ஈரானில் இருந்து வெளியேறும் அனைத்து பாதைகளும் ஆபத்துகளால் நிறைந்துள்ளன. ஈரானில் சாலை மற்றும் ரயில் வழித்தடங்களும் பாதுகாப்பான, நிச்சயமான நிலையிலும் இல்லை. ஈரான் நகரங்களில் பல சாலைகளும் இராணுவப் பகுதிகள் வழியாக செல்கின்றன. இந்த நிலை ஈரானை விட்டு வெளியேறும் பொதுமக்களுக்கு பாதுகாப்பானவை அல்ல.

ஈரானின் கிழக்கு அண்டை நாடுகளான பாகிஸ்தான் மற்றும் ஆப்கானிஸ்தான் இராஜதந்திர ரீதியாகவும் இந்தியாவுக்கு பிரச்சினையாக உள்ளன. இந்தியாவுக்கான தனது வான்வெளியை பாகிஸ்தான் மூடியுள்ளது. மேலும், பாகிஸ்தானின் தடைகளால் தரைவழியாக வெளியேற்றுவதும் சாத்தியமில்லை. இந்தியா – ஆப்கானிஸ்தான் உறவுகள் ஓரளவு மேம்பட்டுள்ளன. இருப்பினும், அங்கிருந்து வெளியேற்றுவதற்கான தளவாடங்களும் கடுமையான பிரச்சினைகளாகவே உள்ளன.

ஆப்கானிஸ்தானின் விமானப் பாதைகளிலும் இந்தியாவுக்கு விமானங்கள் பறக்க முடியாத நிலை. ஏனெனில், விமானங்கள் பாகிஸ்தான் வான்வெளி வழியாக செல்ல வேண்டியிருக்கும். இது, இந்தியாவின் ‘ஒபரேஷன் சிந்தூர்’ நடவடிக்கைக்குப் பின் பாகிஸ்தானால் தடை செய்யப்பட்டுள்ளது. எனினும், ஈரானில் இந்தியாவின் வெளியேற்ற நடவடிக்கைகள் தொடங்கியுள்ளன.

முதல் கட்டமாக, சுமார் 110 பேர் ஈரான் – ஆர்மீனியா எல்லையைக் கடந்துள்ளனர். அவர்களில் பெரும்பாலோர் மாணவர்கள். இது தவிர, 600 முதல் 700 பேர் தெஹ்ரானில் இருந்து அந்நாட்டின் புனித நகரமான கோமுக்கு அனுப்பப்பட்டுள்ளனர். இருப்பினும், அவர்களால் ஈரானின் அரக், கோர்ராமாபாத், இஹான், தப்ரிஸ் மற்றும் கெர்மன்ஷா போன்ற நகரங்களுக்குச் செல்ல முடியாது. ஏனெனில், இந்த நகரங்கள் அணுசக்தி மற்றும் இராணுவ வசதிகளுக்கு அருகில் உள்ளன.

ஆர்மீனியா, அஜர்பைஜான், துர்க்மெனிஸ்தான், ஆப்கானிஸ்தான் மற்றும் பாகிஸ்தானுடன் நில எல்லைகளை ஈரான் பகிர்ந்து கொள்கிறது. இவற்றில், ஆப்கானிஸ்தான் மற்றும் பாகிஸ்தான் ஆகிய இரு நாடுகளும் வெளியேற்றத்துக்கு உகந்தவை அல்ல.

ஒபரேஷன் சிந்தூர் நடவடிக்கையால் உருவான இந்தியா – பாகிஸ்தான் மோதலின் போது, பாகிஸ்தானை அஜர்பைஜான் ஆதரித்தது. எனவே, துர்க்மெனிஸ்தான் தற்போது இந்தியர்கள் வெளியேறும் ஒரு வழியாக உள்ளமை குறிப்பிடத்தக்கது.

# பாகிஸ்தான் பிரச்சினையில் மத்தியஸ்தத்தை ஏற்பதில்லை

## ட்ரம்ப்பிடம் பிரதமர் மோடி உறுதி



பாகிஸ்தானுடனான பிரச்சினைகளில் இந்தியா ஒருபோதும் மத்தியஸ்தத்தை ஏற்றுக்கொண்டதில்லை, ஒருபோதும் ஏற்றுக்கொள்ளாது என்ற செய்தியை அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப்பிடம் பிரதமர் மோடி உறுதியாகத் தெரிவித்தார் என்று இந்திய வெளியுறவுச் செயலாளர் விக்ரம் மிஸ்ரி குறிப்பிட்டுள்ளார்.

கனடாவில் நடைபெற்ற ஜி7 உச்சிமாநாட்டின் ஒரு பகுதியாக, பிரதமர் மோடி அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப்புடன் தொலைபேசியில் உரையாடினார். அரை மணி நேரத்திற்கும் மேலாக நீடித்த இந்த உரையாடலின் போது, இந்தியாவின் 'ஒபரேஷன் சிந்தூர்' குறித்து பிரதமர் மோடி அமெரிக்க ஜனாதிபதியிடம் விளக்கினார்.

இந்த உரையாடல் குறித்து பேசிய வெளியுறவுச் செயலாளர் விக்ரம் மிஸ்ரி,

"சமீபத்திய இந்தியா பாகிஸ்தான் போர் நிறுத்த விவகாரத்தில் எந்த நேரத்திலும், எந்த மட்டத்திலும், இந்தியா – அமெரிக்க வர்த்தக ஒப்பந்தம் அல்லது இந்தியாவிற்கும் பாகிஸ்தானுக்கும் இடையிலான அமெரிக்காவின் மத்தியஸ்தம் போன்ற பிரச்சினைகள் விவாதிக்கப்படவில்லை என்பதை பிரதமர் மோடி ட்ரம்ப்பிடம் தெளிவுபடுத்தினார்.

இராணுவ நடவடிக்கையை நிறுத்துவது குறித்து இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையில், இரு படைகள் தரப்பிலும் நேரடியாக விவாதிக்கப்பட்டது, மேலும் அது பாகிஸ்தானின் வேண்டுகோளின் பேரில் இருந்தது. இந்தியா ஒருபோதும் மத்தியஸ்தத்தை ஏற்றுக்கொண்டதில்லை, ஏற்றுக்கொள்ளவில்லை, ஏற்றுக்கொள்ளப் போவதில்லை என்று ட்ரம்ப்பிடம் பிரதமர் மோடி வலியுறுத்தினார்.

இந்த விடயத்தில் இந்தியாவில் முழுமையான அரசியல் ரீதியான ஒருமித்த கருத்து உள்ளது." என்று கூறினார்.

மேலும், அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் பிரதமர் மோடியின் கருத்துக்களை விரிவாகப் புரிந்துகொண்டார் எனவும் பயங்கரவாதத்திற்கு எதிரான இந்தியாவின் போராட்டத்திற்கு ஆதரவை வெளிப்படுத்தியதாகவும் மிஸ்ரி தெரிவித்தார்.

இந்தியாவிற்கும் பாகிஸ்தானுக்கும் இடையிலான பகைமையை முடிவுக்குக் கொண்டுவருவதற்கான ஒரு வழியாக வர்த்தகத்தை பயன்படுத்தியதாகவும், இந்தியா பாகிஸ்தான் மோதலை முடிவுக்குக் கொண்டுவர மத்தியஸ்தராக தான் உதவியதாகவும் அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் பலமுறை கூறியதைத் தொடர்ந்து இந்த கருத்துக்கள் வந்துள்ளன.

தொடர்ந்து பேசிய விக்ரம் மிஸ்ரி, "ஜி7 உச்சிமாநாட்டின் போது பிரதமர் மோடிக்கும் ட்ரம்ப்புக்கும் இடையிலான சந்திப்பு நடைபெற திட்டமிடப்பட்டது. ஆனால், ட்ரம்ப் அமெரிக்காவுக்கு முன்கூட்டியே திரும்ப வேண்டியிருந்தது,

இதனால் இந்த சந்திப்பு நடக்கவில்லை. இதன் பிறகு, ட்ரம்பின் வேண்டுகோளின் பேரில், இரு தலைவர்களும் தொலைபேசியில் பேசினர். ஏப்ரல் 22 அன்று பஹல்காம் பயங்கரவாத தாக்குதலுக்குப் பிறகு, ட்ரம்ப் பிரதமர் மோடிக்கு தொலைபேசியில் இரங்கல் தெரிவித்து பயங்கரவாதத்திற்கு எதிரான ஆதரவை தெரிவித்தார். ஒபரேஷன் சிந்தூர் நடவடிக்கைக்குப் பிறகு, இரு தலைவர்களுக்கும் இடையிலான முதல் உரையாடல் இதுவாகும்.

# ஈரான் ஒருபோதும் சரணடையாது; உயர் தலைவர் அலி கமேனி தகவல்

ஈரான் ஒருபோதும் சரணடையாது என்றும் எந்தவொரு அமெரிக்க இராணுவத் தலையீடும் ஈடுசெய்ய முடியாத சேதத்துடன் இருக்கும் எனவும் அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப்புக்கு ஈரான் உச்ச தலைவர் அயதுல்லா அலி கமேனி பதிலடி கொடுத்துள்ளார்.

தஸ்னிம் செய்தி நிறுவனம் வெளியிட்டுள்ள தொலைக்காட்சி உரையில் ஈரான் உச்ச தலைவர் அயதுல்லா அலி கமேனி கூறும்போது,

"ஈரான் ஒருபோதும் சரணடையாது. ஈரான் திணிக்கப்பட்ட போருக்கு எதிராக உறுதியாக நிற்கும். அதேபோல் திணிக்கப்பட்ட அமைதிக்கு எதிராகவும் உறுதியாக நிற்கும். திணிக்கப்பட்டால் இந்த நாடு யாருக்கும் சரணடையாது. ஈரானையும் அதன் வரலாற்றையும் அறிந்தவர்கள், ஈரானியர்கள் அச்சுறுத்தலின் மொழிக்கு சரியாக பதிலளிக்க மாட்டார்கள் என்பதை அறிவார்கள். எந்தவொரு அமெரிக்க ராணுவத் தலையீடும் சந்தேகத்துக்கு இடமின்றி சரிசெய்ய முடியாத விளைவுகளுடன் இருக்கும் என்பதை அமெரிக்கர்கள் அறிந்துகொள்ள வேண்டும்." என்றார்.

இதனிடையே, நேற்று தனது அமைச்சரவைக் கூட்டத்தில் உரையாற்றிய ஈரான் ஜனாதிபதி மசூத் பெஷேஷ்கியன்,

"தேசிய ஒற்றுமையுடன் எந்த நெருக்கடியையும் நாங்கள் சமாளிப்போம். மக்கள் எங்களுடன் நின்றால், எந்தப் பிரச்சினையும் நாட்டுக்கு ஆபத்தை விளைவிக்காது. அதனால் தான் அனைத்து நடவடிக்கைகளும் தேசிய ஒற்றுமையைப் பாதுகாப்பதை நோக்கமாகக் கொண்டிருப்பது அவசியம்." என்றார்.

மேலும், அண்டை நாடுகள் அளித்த ஆதரவுக்கு நன்றி தெரிவித்ததோடு, ஈரான் அமைச்சர்கள் அவர்களுடன் தொடர்ந்து தொடர்பில் இருக்குமாறும் அறிவுறுத்தினார்.

முன்னதாக, அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப், தனது சமூக



வலைதள பதிவுகளில்,

"ஈரானின் உச்ச தலைவர் என்று அழைக்கப்படுபவர் எங்கு ஒளிந்துகொண்டிருக்கிறார் என்பது எங்களுக்கு தெரியும். அவர் எங்களுக்கு எளிதான இலக்கு. ஆனால், அங்கு அவர் பத்திரமாக இருக்கிறார். அவரை நாங்கள் வெளியே கொண்டு வரப் போவதில்லை. அதாவது இப்போதைக்கு அவரை எதுவும் செய்யப்போவதில்லை.

ஆனால், அமெரிக்க மக்களோ, படைவீரர்களோ ஏவுகணைகளால் தாக்கப்படுவதை நாங்கள் விரும்பவில்லை. எங்கள் பொறுமை குறைந்துகொண்டே வருகிறது. எனவே ஈரான் எந்த நிபந்தனையும் விதிக்காமல் சரணடைய வேண்டும்." என்று எச்சரித்திருந்தார்.

இதன் தொடர்ச்சியாக, ஈரான் உச்ச தலைவர் அலி கமேனி தனது எக்ஸ் தளத்தில் விடுத்துள்ள செய்தியில்,

"கடவுளின் பெயரில் போர் தொடங்கியுள்ளது. இஸ்ரேலுக்கு வலுவான பதிலடி கொடுக்க வேண்டும். இஸ்ரேலியர்களுக்கு இரக்கம் காட்ட மாட்டோம்" என்று குறிப்பிட்டிருந்தார்.



## இஸ்ரேல், ஈரான் பதற்ற நிலை;

# வழமை போல இடம்பெறும் மசகு எண்ணெய் விநியோகம்

இஸ்ரேல்–ஈரான்பதற்றநிலைமைக்கு மத்தியிலும், சர்வதேச சந்தையில் மசகு எண்ணெய் விநியோகம் தடைப்படாது வழமை போல நடைபெற்று வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த வாரம் ஈரான் மீது இஸ்ரேல் தாக்குதல்களை நடத்தியதையடுத்து, உலக சந்தையில் மசகு எண்ணெய் விலை 13 சதவீதத்தினால் அதிகரித்தது.

பின்னர் கடந்த வெள்ளிக்கிழமை 7 சதவீதம் குறைவடைந்து, கடந்த திங்கள் கிழமை முதல் வழமை போன்று எண்ணெய் வர்த்தகம் இடம்பெற்று வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.


இந்த மோதல்களால், முக்கிய எண்ணெய் பரிமாற்று மையங்களுக்குப் பாதிப்புகள் ஏற்படவில்லை என்றும் எதிர்வரும் நாள்களிலும் இவை மூடப்படுவதற்கான சாத்தியங்கள் இல்லை என்றும் நம்பப்படுவதாக சந்தை ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.





# வடக்கு மாகாணத்தின் 55 வீதமான நிலப் பிரதேசங்கள் மத்திய அரசின் கீழ் இரு திணைக்களங்களிடம் உள்ளன

- ந.லோகதயாளன் -




வடக்கு மாகாணத்தின் மொத்த தரை விஸ்தீரணத்தில் 55.4 வீதமான நிலம் காடு எனப் பிரகடனப்படுத்தப்பட்டு, அந்த காடுகள் அனைத்தும் நேரடியாக மத்திய அரசின் இரு திணைக்களங்களின் பிடியில் உள்ளன.

65,610 ச.கி.மீற்றர் நிலப் பரப்பைக்கொண்ட இலங்கையில் 19,930 ச.கி. மீற்றர் பரப்பு வனப் பகுதியாக காணப்படுகின்றது. இது 29.91 வீதமாக உள்ளது. இந்த 19,930 ஏக்கர் வனப் பரப்பில் வடக்கில் மட்டும் 4902.74 ச.கி. மீற்றர் வனப் பிரதேசம் காணப்படுகின்றது.

### யாழ்ப்பாணம் மாவட்டம்

யாழ்ப்பாணம் மாவட்டம் 1025 ச.கி. மீற்றர. பரப்பளவு கொண்டது.

இங்கும் 316 ச.கி.மீற்றர் பரப்பளவு வன வளம் மற்றும் வன ஜீவராசிகள் திணைக்களங்களிடம் உள்ளது. இது மாவட்டத்தின் 31 வீத நிலப்பரப்பாகும். யாழ்ப்பாணம் மாவட்டத்தின் 316 ச.கி.மீற்றர் நிலப்பில் 2012 ஆம் ஆண்டிற்கு முன்பு வெறும் 21 கெக்டேயர் நிலம் மட்டுமே இத் திணைக்களங்களின் ஆளுகையில் இருந்தது. அதன் பின்பு 31,627 கெக்டேயர் நிலத்திற்கு வர்த்தமானி பிரசுரிக்கப்பட்டு கபளீகரம் செய்யப்பட்டது

### மன்னார் மாவட்டம்

மன்னார் மாவட்டம் 2002 ச.கிலோ மீற்றர் பரப்பளவு கொண்டது.

அதில்,4 லட்சத்து 94 ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பு – அதாவது 1357 ச.கி. மீற்றர் – வன வளம் மற்றும் வன ஜீவராசி திணைக்களங்களிடம் உள்ளது. இது மாவட்டத்தின் 61 வீத நிரப்பரப்பாகும்.

மாவட்டத்தின் 1357 ச.கி.மீற்றர் வனப்பகுதியாக அறிவிக்கப்பட்டுள்ள நிலையில், 2012 ஆம் ஆண்டிற்கு முன்பு 93,071 கெக்டேயர் நிலமே இத் திணைக்களங்களின் ஆளுகையில் இருந்தது. 2012 ஆம் ஆண்டின் பின்பு மேலும் 132,649 கெக்டேயர் நிலத்திற்கு வர்த்தமானி பிரசுரிக்கப்பட்டு, அதுவும் அத்திணைக்களங்களுக்கு சுவஹா செய்யப்பட்டது.

### வவுனியா மாவட்டம்

1967 ச.கி. மீற்றர் பரப்பளவு கொண்ட வவுனியா மாவட்டத்தில் 708 ச.கி.மீற்றர் பரப்பளவு வன வளம் மற்றும் வன ஜீவராசி திணைக்களங்களிடம் உள்ளது. இங்கே மாவட்டத்தின் 36 வீதம் இரு திணைக்களத்திடமும் உள்ளது.

மாவட்டத்தின் 708 ச.கி.மீற்றர் நிலப் பரப்பில் 2012 ஆம் ஆண்டிற்கு முன்பு 39,048 கெக்டேயர் நிலமே இத் திணைக்களங்களின் ஆளுகையில் இருந்து. 2012 இற்குப் பின்பு 29,026 கெக்டேயர் நிலத்திற்கு வர்த்தமானி பிரசுரிக்கப்பட்டு பிடுங்கி எடுக்கப்பட்டது.

### கிளிநொச்சி மாவட்டம்

கிளிநொச்சி மாவட்டமானது 1237 ச.கி. மீற்றர் பரப்பைக்கொண்டது. இங்கே 590 ச.கி.மீற்றர் நிலம் வன வளம் மற்றும் வன ஜீவராசி திணைக்களங்களிடம் உள்ளது. இது மொத்த நிலப்பரப்பின் 42 வீதம் என்பதும் குறிப்பிடத்தக்கது.

மாவட்டத்தின் 590 ச.கி.மீற்றர் நிலப்பில் 2012 ஆம் ஆண்டிற்கு முன்பு 38,195 கெக்டேயர் நிலம் இத் திணைக்களங்களின் ஆளுகையில் இருந்ததோடு, 2012 இன் பின்பு 20,767 கெக்டேயர் நிலத்திற்கு வர்த்தமானி பிரசுரிக்கப்பட்டது.

### முல்லைத்தீவு மாவட்டம்

முல்லைத்தீவு மாவட்டத்தில் 2617 ச.கி நிலப்பரப்பு உண்டு.

இதில் வன வளம் மற்றும் வன ஜீவராசி திணைக்களங்களிடம் மட்டும் 1931.74 ச.கிலோ மீற்றர் நிலப்பரப்பு உள்ளன. இது மொத்த நிலப்பரப்பின் 72 வீத நிலம் என்பதோடு இன்று இலங்கையிலேயே அதிக வனப் பகுதிகளை உடைய முதலாவது மாவட்டம் இதுவாகும்.

முல்லைத்தீவில் வன வளத் திணைக்களமானது 2009ஆம் ஆண்டிற்கு முன்னர் 81 ஆயிரத்து 881 கெக்டேயர் நிலங்களை உரிமைகோரி அரச இதழ் பிரசுரித்துள்ளதோடு, 2009ஆம் ஆண்டிற்கும் 2015 ஆண்டிற்கும் இடையில் 67 ஆயிரத்து 806 கெக்டேயர் நிலங்கள் தமது திணைக்களத்தின் ஆளுகை என அரச இதழ் பிரசுரித்துள்ளனர். இவற்றின் பிரகாரம் 3 லட்சத்து 69 ஆயிரத்து

தொடர்ச்சி▼

# வடக்கு மாகாணத்தின் 55 வீதமான நிலப் பிரதேசங்கள் மத்திய அரசின் கீழ் இரு திணைக்களங்களிடம் உள்ளன

தொடர்ச்சி▲

726 ஏக்கர் நிலம் வனவளத் திணைக்களத்தின் பிடிக்குள் சென்றுவிட்டது. இதிலே 2009 ஆம் ஆண்டிற்கு பின்னர் அரச இதழ் வெளியிட்ட நிலங்களிற்கு இன்றுவரை நில அளவை கூட செய்யப்படவில்லையென முல்லைத்தீவு மாவட்டச் செயலகமும் உறுதி செய்கின்றது.

17 ஆயிரத்து 259 கெக்டேயர் அல்லது 42 ஆயிரத்து 623 ஏக்கர் நிலம் மேலும் சுவீகரிக்கப்பட்டது.

ஒரு லட்சத்து 66 ஆயிரத்து 946 கெக்டேயர் அல்லது 4 லட்சத்து 12 ஆயிரத்து 356 ஏக்கர் நிலம் வன வளத் திணைக்களத்திடம் உள்ளது.

இதேபோன்று வன ஜீவராசிகள் திணைக்களத்தின் ஆளுகையின் கீழ் 8 ஆயிரத்து 517.9 கெக்டேயர் அல்லது 21 ஆயிரத்து 37 ஏக்கர் நிலம் காணப்படுகின்றது.


இந்த இரு திணைக்களங்களின் பிடியில் மாவட்டத்தின் 72 வீதமான நிலப்பகுதிகள் முல்லைத்தீவில் பேணப்படும் சூழலில் எஞ்சிய 28 வீதமான நிலப் பகுதியே நிர்வாக, வாழ்வாதார, தொழில் முயற்சி மற்றும் கற்றல் செயற்பாட்டு நிலங்களாக உள்ளன.

இதற்கமைய வடக்கு மாகாணத்தின் மொத்த நிலத்தின் 55.4 வீதமான நிலம் காடு எனப் பிரகடனப்படுத்தப்பட்டு அந்த காடுகள் அனைத்தும் நேரடியாக மத்திய அரசின் இரு திணைக்களங்களின் பிடியில் உள்ளன.

இதேநேரம் முழு இலங்கையும் 65,610 ச.கி.மீற்றர் நிலப் பரப்பில் 19,930 ச.கி. மீற்றர் பரப்பு வனப் பகுதியாக காணப்படுவதனால் இது 29.91 வீதமாக உள்ளது. இந்த 19,930 ச.கி. மீற்றர் வனப் பரப்பில் வடக்கில் மட்டும் 4902.74 ச.கி. மீற்றர் வனப் பிரதேசம் காணப்படுகின்றது.

## Mannar District

| Land Use Type | Area in Hectare (ha) | Percentage % |
|---|---|---|
| Built up land | 1,905 | 1 |
| Agricultural Land | 36,895 | 18 |
| Non-Agricultural Land | 2,789 | 1 |
| Homesteads/Home Garden | 11,292 | 6 |
| Forest land | 122,038 | 61 |
| Wet Land | 7,258 | 4 |
| Water bodies | 11,186 | 6 |
| Barren Land | 3,992 | 2 |
| Other Land | 2,852 | 1 |
| Total | 200,207 | 100 |








# கிழக்கில் மேலதிகக் கொள்கலன்களுக்கு எரிபொருள் நிரப்புவதற்குத் தடை விதிப்பு

(எஸ்.கீதபொன்கலன்)

வாகனங்களின் எரிபொருள் தாங்கிக்கு மட்டும் எரிபொருள் நிரப்பப்பட வேண்டும். மேலதிக கொள்கலன்களில் எரிபொருள் வழங்கக் கூடாது என்று இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் கிழக்கு பிராந்திய அலுவலகம் அவசர உத்தரவு விடுத்துள்ளது.

தமது கூட்டுத்தாபனத்தின் கிழக்கு மாகாணத்தில் உள்ள எரிபொருள் விற்பனை நிலையங்களுக்கு இந்த அவசர உத்தரவை கிழக்கு பிராந்திய சிரேஷ்ட சந்தைப்படுத்தல் அதிகாரி கே.கே.ரி.எஸ்.தேவப்பிரிய விடுத்துள்ளார்.

இவ்வுத்தரவு நேற்று முன்தினம் முதல் மறு அறிவித்தல் வரை நடைமுறையில் இருக்கும் என்றும், இதனை மீறும் முகவராண்மை எரிபொருள் நிரப்பு நிலையங்களின் உத்தரவு பத்திரம் தம்மால் ரத்து செய்யப்படும் என்றும் அவ்வுத்தரவில் மேலும் கூறப்பட்டுள்ளது.

நாட்டின் எப்பகுதியிலும் எவ்வித எரிபொருளுக்கும் தட்டுப்பாடில்லை. சில பொதுமக்கள் தேவைக்கு மேலதிகமாக எரிபொருளை சேகரித்து வருகின்றனர். இதனால் சில பகுதிகளில் செயற்கையான எரிபொருள் தட்டுப்பாடு உருவாக்கப்பட்டுள்ளது.இந்நிலையை தடுப்பதற்காகவே மேற்படி அவசர உத்தரவை கூட்டுத்தாபனம் விடுத்துள்ளதாக உத்தரவை விடுத்த அதிகாரி கருத்துத் தெரிவித்துள்ளார்.



# நோர்வூட்டில் குளவிக் கொட்டுக்கு இலக்கான ஏழு பெண்கள் கிளங்கன் வைத்தியசாலையில்

நோர்வூட் நிவ்வெளி தோட்டத்தில் பணி புரிந்து கொண்டு இருந்த ஏழு பெண்கள் நேற்றுக் குளவிக் கொட்டுக்கு இலக்கா. நிலையில் டிக்கோயா கிளங்கன் ஆதார வைத்திய சாலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டனர்.

இவ்வாறு குளவி கொட்டுக்கு இலக்கான ஏழு பேரில் ஐந்து பெண்கள் பின்னர் வெளிநோயாளர் பிரிவில் சிகிச்சை பெற்று வெளியேறினர்.

மேலும் இரண்டு பெண்கள் வைத்திய சாலையில் தங்கியிருந்த சிகிச்சை பெற்று வருகின்றனர் என வைத்திய சாலையில் உள்ள வைத்தியர் ஒருவர் தெரிவித்தார்.



# வவுனியா மாநகர முதல்வர், துணை முதல்வர் நேற்றுக் கடமைகளைப் பொறுப்பேற்றனர்!

(கி.வசந்தன்)

வவுனியா மாநகர முதல்வர் மற்றும் துணை முதல்வர் ஆகியோர் நேற்றுக் காலை கடமைகளை உத்தியோகபூர்வமாகப் பொறுப்பேற்றனர்.

வவுனியா மாநகர சபையின் முதல்வர், துணை முதல்வர் தெரிவு அண்மையில் இடம்பெற்றிருந்தது.

அந்த வகையில் முதல்வராக சுந்தரலிங்கம் காண்டீபனும், துணை முதல்வராக பரமேஸ்வரன் கார்த்தீபனும் தெரிவு செய்யப்பட்டிருந்தனர்.

அவர்கள் உத்தியோகபூர்வமாக தமது கடமைகளைப் பொறுப்பேற்றனர்.

இந்த நிகழ்வில் சமயத் தலைவர்கள், பொதுமக்கள், மாநகர சபை உறுப்பினர்கள், உத்தியோகத்தர்கள், அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.











# இ.தொ.காவின் முண்டினால் தேசிய மக்கள் சக்தி தலவாக்கலை, லிந்துலை நகர சபையிலும் ஆட்சி

## பிரதியுபகாரமாக பிரதி தவிசாளர் பதவி இ.தொ.காவுக்கு









**(க.கிஷாந்தன்)**

தலவாக்கலை – லிந்துலை நகர சபையில் இ.தொ.காவின் ஆதரவோடு தேசிய மக்கள் சக்தி ஆட்சியமைத்துள்ளது.

தலவாக்கலை – லிந்துலை நகர சபையின் தலைவர் மற்றும் பிரதி தவிசாளர் ஆகியோரைத் தெரிவு செய்வதற்கான கூட்டம் மத்திய மாகாண உள்ளூராட்சிமன்ற ஆணையாளர் தலைமையில் நேற்று தலவாக்கலை லிந்துலை நகர சபைக் கூட்ட மண்டபத்தில் நடைபெற்றது.

தேசிய மக்கள் சக்தி உறுப்பினர் மலிதுவ லியனகே உபாலி, திறந்த வாக்கெடுப்பு மூலம் நகர சபையின் புதிய தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டார். அதே நேரத்தில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் உறுப்பினர் ரொசான் இராஜசேகர் சபையின் உப தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டார்.

தலவாக்கலை லிந்துலை நகர சபைக்கான தலைவர் மற்றும் உப தலைவர் ஆகிய தெரிவுகள் மத்திய மாகாண உள்ளூராட்சி மன்ற ஆணையாளர் ஏ.எம்.கே.பி.கே. சமிலா அத்தபத்து தலைமையில் இடம்பெற்றது. இதில் தேசிய மக்கள் சக்தி சார்பாக மலிதுவ லியனகே உபாலி, மலையக மக்கள் முன்னணி சார்பாக தாளமுத்து சுதாகர் ஆகியோர் தலைவருக்காகப் போட்டியிட்டனர்.

இதில் திறந்த வாக்கெடுப்பிற்கு 6 வாக்குகள் கிடைக்கப்பெற்றதால், திறந்த வாக்கெடுப்பு இடம்பெற்றது. இரகசிய வாக்கெடுப்பிற்கு 5 வாக்குகள் கிடைக்கப்பெற்றிருந்தது.

நகர பிதாவுக்கான தெரிவில் ஆறு வாக்குகளை பெற்று சபையின் தலைவராக தேசிய மக்கள் சக்தி சார்பாக போட்டியிட்ட மலிதுவ லியனகே உபாலி தெரிவு செய்யப்பட்டார்.

எதிராகப் போட்டியிட்ட மலையக மக்கள் முன்னணியின் உறுப்பினர் தாளமுத்து சுதாகர் 05 வாக்குகளே பெற்றுக்கொண்டார். இதில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் உறுப்பினர் நடுநிலை வகித்தார்.

உப தலைவர் தெரிவு செய்வதற்காக இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் சார்பில் ரொசான் இராஜசேகர், ஐக்கிய மக்கள் சக்தி சார்பாக பஹல விதானகே இஷார அனுருத்த மஞ்சநாயக்க ஆகியோர் போட்டியிட்டனர்.

இதில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் சார்பாக போட்டியிட்ட ரொசான் இராஜசேகர் 06 வாக்குகளை பெற்று உப தலைவராகத் தெரிவானர். இவருக்கு எதிராக போட்டியிட்ட பஹல விதானகே இஷார அனுருத்த மஞ்சநாயக்க 05 வாக்குகளே வாக்குகளே பெற்றுக் கொண்டார்.

தலவாக்கலை லிந்துலை நகர 12 உறுப்பினர்களை கொண்டது. அதன் விவரம் வருமாறு:-

- தேசிய மக்கள் சக்தி – 04
- ஐக்கிய மக்கள் சக்தி – 02
- மலையக மக்கள் முன்னணி – 03
- இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் – 02
- ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன – 01

# தமிழரசு நிலைப்பாட்டுக்கு முரணாகச் செயற்பட்ட உறுப்பினர் மீது உடன் ஒழுக்காற்று நடவடிக்கை

இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் நிலைப்பாட்டுக்கு மாறாக வலிகாமம் வடக்கு பிரதேச சபை வாக்களிப்பின் போது செயற்பட்ட கட்சி உறுப்பினர் உடனடியாவே கட்சி உறுப்புரிமையிலிருந்து இடைநிறுத்தப்பட்டுள்ளமையுடன் விளக்கமும் கோரப்பட்டுள்ளது.

நேற்று இடம்பெற்ற வலிகாமம் வடக்கு பிரதேச சபையின் தெரிவுகளின் போது இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் அறிவுறுத்தலுக்கு மாறாக செயற்பட்ட பொன்னம்பலம் இராசேந்திரம் என்ற கட்சியின் பிரதேச சபை உறுப்பினருக்கு கட்சியின் பொதுச் செயலாளர் எம்.ஏ.சுமந்திரனால் அனுப்பப்பட்ட கடிதத்தில் இவ்விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அக்கடிதத்தில், "இன்று மதியம் நடைபெற்ற வலிகாமம் வடக்கு பிரதேச சபை தவிசாளர் மற்றும் பிரதி தவிசாளர் தெரிவுகளின் போது கட்சியின் மிகத் தெளிவான அறிவுறுத்தலுக்கு மாறாக நீங்கள் நடுநிலை வகித்துள்ளீர்கள். ஆகையால் உடனடியாக அமுலுக்கு வரும்படியாக கட்சி உறுப்புரிமையில் இருந்து நீங்கள் இடை நிறுத்தப்படுகின்றீர்கள்.

"தங்களது இந்த நடவடிக்கை சம்பந்தமான விளக்கம் ஏதும் இருப்பின் ஒரு வார காலத்திற்குள் எழுத்து மூலம் எனக்கு அறிவிக்க வேண்டும். இல்லையெனில் கொடுப்பதற்கு விளக்கம் எதுவும் இல்லை என்ற அடிப்படையிலும் அல்லது ஏற்றுக் கொள்ளக் கூடிய விளக்கமாகஇல்லாவிட்டாலும் கட்சியில் இருந்தும் பிரதேச சபை உறுப்பினர் பதவியில் இருந்தும் உடனடியாக நீக்கப்படுவீர்கள் – என்றுள்ளது.


இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி
ILANKAI TAMIL ARASU KADCHI

HEAD OFFICE
No 30, Martyn Road,
Jaffna, Srilanka

18.06.2025

கட்சி உறுப்புரிமை இடைநிறுத்தமும் விளக்கம் கோரலும்

நன்றி

ம.ஆ. சுமந்திரன்
பொதுச் செயலாளர்

ம.ஆ.சுமந்திரன் PC
பொதுச் செயலாளர்
மி.அஞ்சல்: generalsecretaryitak@gmail.com

# யாழ். இந்தியத் துணைத் தூதருடன் மாநகர முதல்வர் மதிவதனி சந்திப்பு




யாழ்ப்பாணம் மாநகரசபையின் முதல்வர் திருமதி மதிவதனி விவேகானந்தராசா மற்றும் யாழ்ப்பாணம் இந்தியத் துணைத்தூதுவர்.சாய் முரளி ஆகியோருக்கிடையாலன சம்பிரதாய பூர்வ சந்திப்பு ஓரிரு தினங்களுக்கு முன்னர் யாழ்ப்பாணம் இந்தியத் துணைத் தூதரகத்தில் நடைபெற்றது.

சந்திப்பின் போது புதிதாக மாநகர முதல்வராக பொறுப்பேற்றுள்ள முதல்வரை யாழ் இந்தியத் துணைத்தூதுவர் வாழ்த்தி வரவேற்றார். அதனைத் தொடர்ந்து இருவருக்குமிடையே யாழ். மாநகரசபை மற்றும் இந்தியத் துணைத் தூதரகத்தின் யாழ்ப்பாணத்தை மையப்படுத்திய வேலைத்திட்டங்கள் தொடர்பான முக்கிய விடயங்கள் குறித்து கலந்துரையாடப்பட்டன.

மாநகரசபையினால் தற்போது முன்னெடுக்கப்பட்டுவரும் வேலைத் திட்டங்கள், மாநகர மக்களுக்கான சுமூகமான சேவைகளை தொடர்ந்து முன்னெடுப்பதில் உள்ள சவால்கள் மற்றும் மாநகரசபையின் முக்கிய தேவைகள் குறித்து தூதுவரின் கவனத்திற்கு முதல்வர் கொண்டு சென்றார்.

தொடர்ந்து தூதுவர் சாய் முரளி பதிலளிக்கையில், முதல்வர் சுட்டிக்காட்டிய முடியுமான முக்கிய உதவிகளை மாநகரத்தின் மக்களுக்கான சேவையின் அவசியம் கருதி நிறைவேற்றித்தர முயற்சிப்பதாகவும், அதற்கான திட்ட முன்மொழிவுகள் மற்றும் கோரிக்கைகளை முன்வைக்குமாறும் குறிப்பிட்டார்.

அத்துடன் எதிர்காலத்தில் தூதுரகத்தினால் முன்னெடுக்கப்படும் யாழ்ப்பாணம் நகர அபிவிருத்தி தொடர்பில் இணைந்து பணியாற்ற ஒத்துழைக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். மாநகரத்தின் அபிவிருத்திக்கும் முன்னேற்றத்திற்கும் தனது முழுமையான ஒத்துழைப்புக்கள் என்றும் இருக்கும் என்றும் முதல்வர் குறிப்பிட்டார் என முதல்வரின் ஊடகப் பிரிவு தெரிவித்தது.

# இன்றைய ராசி பலன்கள் - 19.06.2025




இன்று ஆன்மீக செயல்களில் ஈடுபடுவதற்கு சாதகமான நாள். அது உங்களுக்கு ஆறுதல் அளிக்கும். வளர்ச்சியை அளிக்கும். இன்றைய நாளை சிறந்ததாக ஆக்க புதிய வழிகளைக் காண்பீர்கள். உணர்ச்சிவசப்படுவதை தவிர்க்கவும்.

உங்கள் அன்றாட பணிகளை மேற்கொள்ளும் போது கவனம் தேவை. இன்று அதிக பணிகள் மேற்கொள்ள வாய்ப்புள்ளது.

உங்களிடம் அகந்தைப் போக்கு காணப்படும். அதனை உங்கள் துணையிடம் வெளிப்படுத்துவீர்கள். உங்கள் அணுகுமுறையை மாற்றிக் கொள்ள வேண்டும். இதன் மூலம் உறவு வலுப்படும்.

இன்று கூடுதல் செலவுகள் காணப்படும். பணப்பற்றாக் குறையை சந்திப்பீர்கள். இதனால் வருத்தமான மனநிலை காணப்படும்.




இன்று விரும்பும் பலன்கள் கிடைக்காது. இன்றைய சவால்களை கையாள அனுசரணையான அணுகுமுறை தேவை. தன்னம்பிகை குறைந்து காணப்படும். அதனை உருவாக்கிக் கொள்ளும் வழி காண வேண்டும்.

கடினமான பணிகள் காணப்படும். அதனால் நேரம் செலவாகும். கவலையை உண்டாக்கும். பணியிடத்தில் சவாலான சூழ்நிலை காணப்படும்.

உங்கள் துணையுடன் இணக்கமான உறவு காணப்படாது. ஒருவருக்கொருவர் மனம் திறந்து பேசுவதன் மூலம் இன்றைய நாளை இனிமையாக்கலாம்.

இன்று பண வரவு ஏற்படும் அதிர்ஷ்டம் காணப்படாது. பணப்பற்றாக்குறை காணப்படும். இது உங்களுக்குக் கவலையை அளிக்கும்.




இன்றைய நாள் உங்களுக்கு சாதகமாகஇருக்கும்.உங்கள்திட்டங்களை செயலாற்ற நீங்கள் விரைந்து முடிவெடுப்பீர்கள். உங்கள் தன்னம்பிக்கையை மேம்படுத்த முயற்சி செய்வீர்கள்.

பணியிடத்தில் நற்பெயர் பெறுவீர்கள். பல வாய்ப்புகள் காணப்படும். அது உங்களுக்கு திருப்தியை அளிக்கும்.

உங்கள் துணையுடன் உற்சாகமான தருணங்களை பகிர்ந்து கொள்வீர்கள். உங்கள் துணையுடன் வெளியிடங்களுக்கு சென்று வருவீர்கள்.

இன்று பணவரவு அதிகமாக இருக்கும். உங்கள் வங்கியிருப்பை அதிகரிக்கச் செய்யும் நிலையில் இருப்பீர்கள்.

நீங்கள் சிறந்த மனநிலையில் காணப்படுவீர்கள். தன்னம்பிக்கையுடன் இருப்பீர்கள். அதனால் உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




இன்று நம்பிக்கையான நாள். உங்கள் இலக்குகளை எளிதில் அடைவீர்கள். பயனுள்ள திட்டங்களை தீட்டுவீர்கள். அதன் மூலம் நன்மை விளையும்.

இன்று பணியின் மூலம் பல சாதகமான பலன்கள் பெறுவீர்கள். கூடுதல் பணவரவு ஊக்கத் தொகை அல்லது சலுகை வகையில் கிடைக்கும்.

உங்கள் துணையுடன் நண்பர் வீட்டு திருமண நிகழ்ச்சியில் கலந்து கொண்டு மகிழ்வீர்கள். இதனால் மகிழ்ச்சி நிலவும்.

இன்று அதிர்ஷ்டகரமான நிதிநிலை காணப்படும். உங்கள் சேமிக்கும் ஆற்றல் உயரும்.

உங்களிடம் காணப்படும் மகிழ்ச்சி காரணமாக உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




இன்று பதற்றமான சூழ்நிலை காணப்படும். அதனை நீங்கள் கையாள வேண்டும். முக்கிய முடிவுகள் எடுப்பதை நீங்கள் தவிர்க்கவும்.

இன்று பணிகள் அதிகமாக காணப் படும் என்பதால் உங்கள் பணிகளை அமைதியாக மேற்கொள்ள வேண்டியது அவசியம். திட்டமிட்டு அதன்படி பணிகளை மேற்கொள்ளுங்கள்.

பாதுகாப்பின்மை உணர்வு உங்களிடம் காணப்படும். அதனை உங்கள் துணையிடம் வெளிப்படுத்துவீர்கள். உறவின் நல்லிணக்கத்தை பாதிக்கும் இத்தகைய உணர்வுகளை தவிர்த்தல் நல்லது.

இன்று நிதிநிலைமை ஏமாற்றத்தை அளிக்கும். செலவுகள் அதிகமாக காணப்படும். சூழ்நிலையைக் கையாள்வதை கடினமாக உணர்வீர்கள்.




இன்று உங்கள் அன்றாட செயல்களை கவனமாக கையாள வேண்டும். முக்கிய முடிவுகள் எடுப்பதை தவிர்க்க வேண்டும். இன்று சஞ்சலமான உணர்வுகளால் பாதிக்கப் படுவீர்கள். ஆன்மீக நடவடிக்கைகள் அமைதி மற்றும் ஆறுதலை அளிக்கும்.

அதிகப் பணிகள் காரணமாக இன்று நீங்கள் பணிகளை சரியான நேரத்தில் முடிக்க இயலாது.

உங்கள் துணையிடம் உணர்ச்சிப் பூர்வமாக நடந்து கொள்வீர்கள். நல்லுறவு ஏற்பட இத்தகைய உணர்வை தவிர்த்தல் நல்லது.

உங்கள் தேவைகளை பூர்த்தி செய்துகொள்ள போதிய பணம் காணப்படாது. கூடுதல் செலவுகள் மற்றும் தேவையற்ற செலவுகள் ஏற்படும்.




இன்று நம்பிக்கையான, நன்மை தரும் நாள். இன்று பல நன்மைகள் விளையும். நீங்கள் சிறப்பாக திட்டமிட்டு முக்கிய முடிவுகள் எடுக்கலாம்.

பணியிடத்தில் நல்ல வளர்ச்சி காண்பீர்கள். உங்கள் மேலதிகாரிகளின் பாராட்டை பெறுவீர்கள்.

இன்று உங்கள் துணையுடன் வெளியில் சென்று மகிழ்வீர்கள். இதனால் இருவரிடையே மகிழ்ச்சி நிலவும்.

மூத்தவர்களின் மூலம் பணவரவு பரிசாக கிடைக்கப் பெறுவீர்கள். இது உங்களுக்கு திருப்தியை அளிக்கும்.

இன்று உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். ஆரோக்கியப் பிரச்சினை ஏதும் இருக்காது.




இன்று உங்கள் இலக்குகளில் சிறந்த வெற்றி காண இயலாது. இன்று நீங்கள் புதிய விஷயங்களை கற்க விரும்புவீர்கள். ஆனால் சில காரணங்களால் பலன்கள் உங்களுக்கு சாதகமாக இருக்காது. உங்கள் செயல்களில் பொறுமையை கையாளுங்கள்.

பணியிடச் சூழல் சாதகமாக இருக்காது. பணிகள் நிலுவையில் இருக்கும். இது உங்களுக்கு கவலை அளிக்கும். பணியில் மந்த நிலை காணப்படும்.

நீங்கள் அமைதியிழந்து உங்கள் துணையிடம் கோப உணர்வை வெளிப்படுத்துவீர்கள். இதனால் கருத்து வேறுபாடு ஏற்படும்.

பண வரவுக்கு இது சாதகமான நாள் அல்ல. உங்கள் குழந்தைகளுக்காக நீங்கள் பணம் செலவு செய்வீர்கள்.

# இன்றைய ராசி பலன்கள் - 19.06.2025




உங்கள் திறமைகளை சோதிக்கும் சூழ்நிலை உருவாகும் என்பதால் பொறுமையாக இருக்க வேண்டும். உங்கள் முன்னேற்றத்தில் மந்த நிலை காணப்படும். அதிகமாக சிந்திக்காமல் தெளிவான மன நிலையுடன் இருங்கள்.

இன்று பணிகள் சலிப்பைத் தரும் வகையில் இருக்கும். அதிக பணிகள் காரணமாக சில பணிகள் நிலுவையில் இருக்கும். திட்டமிட்டு பணியாற்ற வேண்டும்.

உங்கள் துணையிடம் உணர்ச்சி வசப்படுவீர்கள். இதனால் இருவருக்கிடையேயான புரிந்துணர்வு பாதிக் கப்படும்.நீங்கள் அமைதியான நட்பான அணுகுமுறை மேற்கொள்ள வேண்டும்.

இன்று பண இழப்பு காணப்படுகின்றது. உங்களின் பிரியமான ஒருவரின் ஆரோக்கியத்துக்காகச் செலவு செய்ய நேரும்.




இன்று வளர்ச்சிக்கு சாதகமான நாள். எதிர்பாராதவிதமாக நன்மை கிடைக்கும். இது உங்களுக்கு திருப்தி யையும் மகிழ்ச்சியையும் அளிக்கும். விருந்தினர்களின் திடீர் வருகையால் மகிழ்ச்சியடைவீர்கள்.

பணியிடத்தில் உற்சாகமான வாய்ப்புகள் காத்திருக்கும். பணியிடச் சூழல் இனிமையாக இருப்பதாக உணர்வீர்கள். உங்கள் பணியில் நீங்கள் மகிழ்ச்சியாக இருப்பீர்கள்.

உங்களின் உற்சாகமான வார்த்தைகள் உங்கள் துணையை மகிழ்விக்கும். இருவரும் மறக்க முடியாத தருணங்களை பகிர்ந்து கொள்வீர்கள்.

இன்று நிதிநிலைமை சிறப்பாக இருக்கும். நீங்கள் கணிசமான தொகையை சேமிப்பீர்கள்.

உங்களிடம் காணப்படும் உறுதி காரணமாக இன்று உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




இன்று உங்களுக்கு சில அசௌ கரியங்கள் காணப்படும். விளைவுகள் உங்களுக்கு சாதகமாக அமைய நீங்கள் கடினமாக உழைக்க வேண்டும். சில சௌகரியங்களை விட்டுக்கொடுக்க வேண்டும். உங்கள் தந்தையுடன் கருத்து வேறுபாடு காணப்படும். ஆன்மீக ஈடுபாடு அமைதியை அளிக்கும்.

உங்கள் பணிகளை ஒழுங்கமைத்து பணியாற்ற சிறப்பாக திட்டமிட வேண்டும். நீங்கள் சிறந்த பலன் பெற இன்று கவனமுடன் பணியாற்ற வேண்டும்.

நீங்கள் உங்கள் துணையிடம் உணர்ச்சிகரமாக நடந்துகொள்வீர்கள். இந்தப் போக்கு உறவின் புரிந் துணர்வை பாதிக்கும்.

உங்கள் கடின உழைப்புக்கு ஊக்கத்தொகை அல்லது சலுகை வகையில் பணம் கிடைக்கும்.




இன்று துடிப்பான நாளாக இருக்கும். இன்று நம்பிக்கையான அணுகுமுறை மேற்கொள்வீர்கள். எதிர்காலம் பற் றிய முக்கிய முடிவுகள் எடுக்க இன்று உகந்த நாள்.

பணியிடத்தில் வளர்ச்சி சுமூகமாக இருக்கும். பணியிடச் சூழல் சாதகமாக இருக்கும். இது உங்களுக்கு திருப்தியை அளிக்கும்.

உங்கள் துணையுடன் நல்ல புரிந்துணர்வை பகிர்ந்து கொள்வீர்கள். இதனால் உறவில் மகிழ்ச்சியும் நல்லி ணக்கமும் காணப்படும்.

உங்கள் தேவைகளை எளிதாக நிறைவேற்றுவீர்கள். அதிக பணம் சேமிக்கும் வாய்ப்பு உள்ளது. இதனால் பாதுகாப்பாக உணர்வீர்கள்.

உங்களிடம் காணப்படும் ஆற்றல் மற்றும் உறுதி காரணமாக இன்று ஸ்திரமான முன்னேற்றகரமான ஆரோக்கியம் காணப்படும்.

# மூதூரில் பிக்குவின் முறைப்பாட்டில் கைதான தமிழருக்கு பிணை அனுமதி



**(எஸ்.கீதபொன்கலன்)**

மூதூர் 3ஆம் கட்டை மலையில் அமைக்கப்பட்டுள்ள பௌத்த விகாரையின் விகாராதிபதி கொடுத்த முறைப்பாட்டின்படி சென்ற வாரம் கைது செய்யப்பட்டிருந்த அ.ரமேஷ் என்பவர், நேற்று மூதூர் நீதிவான் நீதிமன்றத்தால் பிணையில் விடுவிக்கப்பட்டார்.

விகாராதிபதி மேற்படி நபருக்கு எதிராக மூதூர் பொலிஸில் செய்த முறைப்பாட்டின்படி அவர் கைது செய்யப்பட்டு, நேற்றைய தினம் மூதூர் நீதிவான் நீதிமன்றில் ஆஜர் படுத்தப்பட்டார். கைது செய்யப்பட்டிருந்த நபர் சார்பாக சட்டத்தரணி திலகரெத்தினம் துஷ்யந்தன் மற்றும் சட்டதரணி புவி ராஜசிங்கம் முகுந்தனும் ஆகியோர் ஆஜராகி இருந்தனர் .

விசாரணையின் போது சந்தேக நபர் சார்பாக ஆஜராகிய சட்டத்தரணி தி.துஷ்யந்தன் தமது வாதத்தின் போது –

இக்காணிக்கு அரசினால் வழங்கப்பட்ட உறுதி இருக்கிறது. இந் நிலையில் 2015 ஆம் ஆண்டு காலப் பகுதியில் பலாத்காரமாக ஆயுத படையினர் இந்த இடத்தில் முகாம் அமைத்து அதில் சிறிய புத்தர் சிலை வைத்து வழிபட்டனர். பின் அவர்கள் அங்கிருந்து 2020 இல் வெளியேறும் போது பிறகு வந்து அச்சிலையை எடுத்துச் செல்வார்கள் எனக் கூறிச் சென்றனர்.ஆனால் இன்றுவரை அச்சிலை அகற்றப்படாமல் அந்த இடத்திலேயே உள்ளது. இந்த நிலையில் சந்தேகநபர் புத்தர் சிலையுடன் பிள்ளையார் சிலையையும் வைத்து கடந்த 4 வருடங்களாக வழிபாடு செய்து வந்தார்.

கடந்த பொசன் காலத்தில் விகாராதிபதி வந்து பிள்ளையார் சிலையை அகற்ற முயன்றார். ரமேஷ் எதிர்த்தமையால் அவருக்கு எதிராக முறைப்பாடு செய்தார். இதனால் சந்தேகநபர் கைது செய்யப்பட்டார்.

இது மத சுதந்திரத்தை மீறும் செயல். இன முறுகலை ஏற்படுத்தும் செயல். எனவே கைது செய்யப்பட்ட நபரை விடுவிக்க மன்றைக் கோருகின்றேன். – என வாதிட்டார்.

இந்த வாதத்தை அடுத்து நீதிவான் சந்தேகநபருக்குப் பிணை வழங்கியமையுடன், இன முறுகலை ஏற்படுத்தும் இத்தகைய செயற்பாடுகளை ஊக்குவிக்க வேண்டாம் என்று பொலிஸாருக்கு அறிவுறுத்தினார்.